விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 27 ஞாயிற்றுக்கிழமை (10.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை ஆட்சியில் குடும்ப ஆதிக்கம்

# மனித உரிமை மீறலும் ஏராளம்

## மீண்டும் அடித்துக் கூறுகிறது அமெரிக்கா


(நியூயோர்க்)

**இலங்கை அரசாங்கமும் அதன் கருவியாகச் செயற்படும் படைத்தரப்பினர் மற்றும் துணை ஆயுதக் குழுக்களும் கடுமையான மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட 2010ஆம் ஆண்டுக்கான சிறிலங்காவின் மனிதவுரிமைகள் குறித்த அறிக்கையிலேயே இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.**

40 பக்கங்களைக்கொண்ட இவ்வறிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பம் அரசியலில் செலுத்தும் ஆதிக்கம் தொடக்கம் ஆட்கடத்தல்கள், சட்டத்துக்கு முரணான படுகொலைகள் மற்றும் துன்புறுத்தல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் படையினர் மற்றும் துணை ஆயுதக் குழுக்கள் போன்றோருக்கு உள்ள தொடர்புகள் என பல்வேறு மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டில் ஆட்கடத்தல்கள், சட்டத்துக்கு முரணான படுகொலைகளின் எண்ணிக்கை இலங்கையில் குறைவடைந்துள்ள போதிலும் படைத்தரப்பினரும் அதன் துணைக் குழுக்களும் தொடர்ந்தும் மோசமான (02ஆம் பக்கம் பார்க்க)

# தீவிரவாத அமைப்பின் பிரதிநிதிகளை சந்திக்கவும் இல்லை; சிந்திக்கவும் இல்லை

## விளக்கம் தருகிறார் றொபேட் ஓ பிளேக்



(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளைச் சந்தித்தமை தொடர்பில் கொழும்பு அதிருப்தி கொண்டுள்ள நிலையில், தான் தீவிரவாத அமைப்பின் பிரதிநிதிகள் எவரையும் சந்திக்கவில்லை என றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையொன்று அண்மையில் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடன் றொபேட் ஓ பிளேக் மேற்கொண்ட பேச்சுவார்த்தை- சந்திப்பு குறித்து அமெரிக்காவைக் கண்டிக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் றொபேட் ஓ பிளேக் குறிப்பிட்ட அப்பத்திரிகைக்கு அனுப்பி வைத்துள்ள (02ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பினர் பதவியேற்றனர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவானோர் நேற்றுக் காலை திருகோணமலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று திருகோணமலை நகர மண்டபத்தில் பிரஸ்தாப உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண வைபவம் நடைபெற்றது.

அதன்போது வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய பன்னிரண்டு உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு கட்சியின் தலைவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

நிகழ்வின் (20ஆம் பக்கம் பார்க்க)

# யோகியை கைது செய்த ஆதாரங்கள் உண்டு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் தகவல்

(வன்னி)

வன்னியில் இடம்பெற்ற போரின் இறுதி நாட்களில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்து காணாமற்போன விடுதலைப்புலிகள் தொடர்பில் அரசு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென வாஷிங்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. கடந்த 7ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறுதிக் கட்டப் போரில் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளராக முன்னர் பணியாற்றிய யோகரத்தினம் யோகி உட்பட 20இற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் சரணடைந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. ஆனால் அவர்கள் தொடர்பில் எந்த தகவல்களும் இல்லை.

2009ஆம் (02ஆம் பக்கம் பார்க்க)



~~ரூ.4,490/-~~
ரூ.2,990/-
மட்டுமே
மொபைல் புரோட்பேண்ட் பக்கேஜுடன் HSPA மோடம் ஒன்றை ரூ.2,990/-ற்கு பெற்றுக்கொள்ளுங்கள்.
Dialog

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைவருக்குமான, நவீன, அழகிய தெரிவுகளுக்கு...
நல்லூர்,
சரவணா ரெக்ஸ்

இல. 526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
(C-2797)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...
சிங்கர் எயார்கண்டிஷனர்கள்
• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு

SINGER®
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்
யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்
SLMO

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until April 30th 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# யோகியை கைது செய்த...

ஆண்டு மே மாதம் இராணுவத்திடம் சரணடைந்த யோகி, பேருந்து ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதை மக்கள் கண்டுள்ளனர். ஆனால் அந்த தினத்தைச் சரியாகத் தெரிவிக்க முடியவில்லை.

பெரும்பாலானோர் இறுதிக்கட்டச் சமர் நடைபெற்ற இடத்தின் தென்கிழக்கு பகுதியான வட்டுவாகல் பகுதியிலேயே சரணடைந்திருந்தனர். அந்தப் பகுதியில் இராணுவத்தினரின் 59ஆவது படையணி நிலைகொண்டிருந்தது.

கேணல் ரமேஸ் போரில் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்துவருகின்றது. ஆனால் அவர் இராணுவத்தின் தடுப்புக் காவலில் இருந்தது தொடர்பில் எம்மிடம் பல காணொளி ஆதாரங்கள் உள்ளன. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# தீவிரவாத அமைப்பின் பிரதிநிதி...

கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையைச் சேர்ந்தவர்களுடனான சந்திப்பு மற்றும் எனது கொழும்புக்கான விஜயம் தொடர்பாக கடந்த வாரம் வெளியான செய்திகளில் காணப்படும் தவறான புரிதல்கள் குறித்து தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நான் தொடர்ச்சியாக இலங்கையைச்சேர்ந்தவர்கள் மற்றும் பல்வேறுபட்ட இனத்துவப் பின்னணி மற்றும் கருத்துகளைக் கொண்ட புலம்பெயர்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து வருகின்றேன். அவ்வாறே இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஏனைய தெற்கு, மத்திய ஆசிய நாடுகளின் புலம்பெயர்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகின்றேன்.

உலகத்தமிழர் பேரவையுடனான சந்திப்பு அவ்விதமான ஒன்றே. இதில் கலந்துகொண்டவர்கள் இலங்கை தமிழர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து தமது கருத்துகளை எம்முடன் பகிர்ந்துகொண்டனர். நான் அவர்களுக்கு அமெரிக்காவின் கொள்கை முன்னுரிமைகள் குறித்து விபரித்தேன்.

அமெரிக்கா பிரிவினைவாதத்திற்கு ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை என்பதை நான் உறுதிபடக் கூறுகின்றேன். அமைதியான ஜனநாயகத்துடன் கூடிய ஐக்கிய இலங்கையையே அமெரிக்கா விரும்புகிறது. அத்துடன் புலம்பெயர் சமூகப் பிரதிநிதிகளை நான் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு ஊக்கமளித்தேன். சர்வதேச சமூகம் இலங்கையில் செழிப்பையும் அபிவிருத்தியையும் ஊக்கப்படுத்துகின்றது.

பல்வேறு புலம்பெயர் குழுக்களைச் சந்தித்திருப்பினும் வன்முறை அல்லது தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய எந்தவொரு தனிநபரையோ அல்லது அமைப்புகளையோ நான் சந்திக்கவில்லை என்பதை இறுதியாகத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

இரண்டாவதாக இலங்கைக்கு நான் ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே விஜயம் செய்யத் தீர்மானித்திருந்தேன்.

இலங்கை அரசாங்கம் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் மற்றும் ஏனைய தரப்பினருடனான எனது கலந்துரையாடல்களை தொடர்ந்து நடத்த வேண்டியிருந்தது. இலங்கையின் நிலைமைகள் குறித்து மேலும் அறிந்துகொள்ளவும், அமெரிக்காவின் கொள்கையை அவர்களுக்கு விபரிக்கவும் வேண்டியிருந்தது.

நான் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த நேரத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வெளிநாட்டில் தங்கியிருந்தார். இதனால் எனது பயணத்தை பிற்போடுமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டது. இலங்கைக்கு நான் விரைவில் விஜயம் செய்வேன் எனவும் குறிப்பிட்ட ஆங்கில பத்திரிகைக்கு அவர் அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# இலங்கை ஆட்சியில் குடும்ப...

மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்பாக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன் படைத்தரப்பினர் நியாயமற்ற வகையில் சட்டத்துக்கு முரணான படுகொலைகளையும் சித்திரவதைகளையும் மேற்கொள்வதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை துன்புறுத்துவதாக இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நியாயமற்ற கைதுகளும் தடுத்துவைப்புகளும் தமிழ்மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் போர் முடிவுக்கு வந்த பின்னர் காணாமற் போகின்றவர்களில் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும், நபர்கள் காணாமல் போகின்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற் போனவர்கள், கப்பம் பெறும் நோக்கில் அல்லது குற்றவியல் காரணங்களுக்காக கடத்தப்பட்டதாக தோன்றவில்லை எனக் குறிப்பிட்டுள்ள இந்த அறிக்கை இத்தகைய சம்பவங்கள் பலவற்றுடன் அரசாங்கத்தின் பின்னணி இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கில் அரச புலனாய்வுப் பிரிவு படைத்தரப்பினரும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொதுமக்களை நியாயமற்ற வகையில் தடுத்து வைத்துள்ளதாக இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் ஊடகங்கள் மீதான அடக்குமுறை குறித்து சுட்டிக்காட்டியுள்ள இவ்வறிக்கை பெரும்பாலான ஊடகவியலாளர்கள் தாமாகவே சுய தணிக்கையை பின்பற்றி வருவதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

## மரண அறிவித்தல்



### இராசையா தங்கமணி

**(சின்னக்கிளி)**

அல்வாய் வடக்கை சேர்ந்த திருமதி **இராசையா தங்கமணி** 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 10.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்

தகவல்
குடும்பத்தினர்

(சி-2937)

**விற்பனைக்கு**

சகல விதமான கருங்கல் சல்லிகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு:-
0777393158
(சி-2883)

**வீடு வாடகைக்கு**

Chundukuli, கச்சேரிக்கு அருகாமையில் தனி வழிப் பாதையுடன் Large room, Varanda, Toilet வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
பெண்பிள்ளைகள், தாயும் மகளும் விரும்பத்தக்கது.
Tel :- 0750828308, 0715360865
(4417)

**BRIGHT INN**
51, சிவன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel - 021-2221889
021-4922334
A/C & Non A/C Rooms Available.
மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகளை பெற்றுக் கொள்ளலாம்
திருமண, பிறந்தநாள் வைபவங்களுக்கான உணவு வகைகள் ஓடரிற்கு செய்து கொடுக்கப்படும்
Take away (ஓடர்கள் வீட்டிற்கு கொண்டுவந்துதரப்படும்)
(சி-2882)

மலரும் புத்தாண்டில் மனம் கவரும் மலிவு விலையில் 10,11,12,13 நாட்கள் வரை

**MEITRO Pc Systems**

**மாபெரும் கணணிகள் விற்பனை**

Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR11 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
15.6" LED Moniter
Keyboard & Mouse
Rs. 37,000/=

Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
15.6" LED Moniter
Keyboard & Mouse
Rs. 38,500/=

Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
18.5" LCD Moniter
Keyboard & Mouse
Rs. 42,000/=

Intel Core I5 3.2Ghz
Intel H55 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
ATX Cassing
Keyboard & Mouse
DVD Writer
18.5" LCD Moniter
Rs. 61,000/=

Dual Core 3.2Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
18.5" LCD Moniter
Keyboard & Mouse
Rs. 44,000/=

Intel Core I3 3.06Ghz
Intel H55 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
Rs. 37,850/=

Intel Core I3 3.06Ghz
Intel H55 Chipset M/B
4GB DDR111 Ram
1TB HDD
DVD Writer
ATX Cassing
18.5" LCD Moniter
Keyboard & Mouse
Rs. 58,900/=


T.P :- 0779591134 , 0750408851
175/3 Kasturiar Road Jaffna
(சி-2936)


ரீலு இல்ல ரியலு
டயலொக் TVயின்
தீ
நகல் அல்ல அசல் தமிழ் நிகழ்ச்சிகளை
கண்டுகளியுங்கள்
தீ பக்கேஜ் - 30 அலைவரிசைகள் - மாதாந்தம் ரூ. 729/-
பொழுதுபோக்கு தமிழ்
பொழுதுபோக்கு ஹிந்தி
கல்வி
செய்திகள்
விளையாட்டு
இசை
அனைத்துப் பக்கேஜ்களுடனும் போனஸ் அலைவரிசைகள் இலவசமாக இணைக்கப்படும்
உள்ளூர் அலைவரிசைகள்
சமய அலைவரிசைகள்
கோரிக்கையின் பேரில் மட்டும்
டயலொக் TV இணைப்புக் கட்டணம் ரூ. 9,990/-
24 மணிநேர பொழுதுபோக்கு
நாடு முழுவதுமான பரந்த வலையமைப்பு
வரிகள் உள்ளடக்கப்படும்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.dialog.lk/tv
Dialog

# உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழா







உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்வுகள் நேற்று 09.04.2011 நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரும், நூற்றாண்டுவிழா மண்டபத்தின் ஸ்தாபகருமான க.தர்மகுலசிங்கம் குடும்பத்தினரும் மற்றும் அதிபர், சிறப்பு விருந்தினர்கள் கற்பக விநாயகர் ஆலயத்தில் இருந்து வழிபாடு செய்து அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும்,

கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் தேசியக் கொடி யேற்றுவதை இரண்டாவது படத்திலும், கல்லூரியின் முதல்வர் அ.ஈஸ்வரநாதன் அவர்கள் கல்லூரிக் கொடியேற்றுவதை மூன்றாவது படத்திலும், மண்டப ஸ்தாபகர் நந்திக் கொடி ஏற்றுவதை நான்காவது படத்திலும், மண்டப ஸ்தாபகர், கீழ்மாடியின் நுழை வாயிலை திரைநீக்கம் செய்வதனை ஐந்தாவது படத்திலும், மண்டப ஸ்தாபகர் நாடாவை வெட்டி நூற்றாண்டுவிழா மண்டபத்தை திறந்து வைப்பதை ஆறாவது படத்திலும், கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமாடுதல் ஏழாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோர் அமர்ந்திருப்பதனை எட்டாவது படத்திலும் காணலாம்.

**Global Academy Of Automation**

புதுவருட வாழ்த்துக்கள்

சர்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளக் கூடிய கணினி கற்கை நெறிகள்.



வருடப்பிறப்பை முன்னிட்டு விசேட கட்டணச் சலுகை...!

- Diploma In Microsoft Office 2007
- Diploma In Desktop Publishing
- Diploma In Wep Design
- Diploma In Computer Applications
- Diploma In Hard Ware
- Ad. Diploma In Video Editing
- Ad. Diploma In Digital Pre Press
- Certificat In Internet & E-mail

100% Practical

க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் விசேட கட்டணக் கழிவுடன் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. உடன் விரையுங்கள்



#5, First Floor, New Market Building,
Jaffna.
Tel : 011-3050111

(சி-2940)

**விற்பனையாளர் தேவை**

புடைவை நிலையத்திற்கு விற்பனை செய்வதில் அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. திறமைக் கேற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். தொடர்புக்கு:-

**லைடன் புடவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)
T.P :- 021 2222381

(சி-2926)

**வேலை வாய்ப்பு**

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள போட்டோ கொப்பி நிறுவனத்திற்கு வேலை தெரிந்த / பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:
0750324200

(4445)


**வீடு, காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் கண்டி வீதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அருகில், இல.75/1 2 பரப்பு 10.7குழி காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு தொலைபேசி
இல: 0712087175

(4443)

# உரும்பிராய் இந்து கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மூன்றாம் நாள் நிகழ்வு நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதலாம் அரங்கு காலை 9 மணிக்கு கற்பக விநாயகர் நூற்றாண்டு விழா மண்டபத்தில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், யாழ்ப்பாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி செல்வரத்தினம், வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரன், கனடா இளைய பழைய மாணவ சங்க இ.சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. நூலின் முதற் பிரதியை இப்பாடசாலையின் லண்டன் வாழ் பழைய மாணவன் கந்தசாமி ஜெயவீரசிங்கம் பெறுவார். மதிப்பீட்டுரையை கலாநிதி திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றுவார். ஏற்புரையை நூலாசிரியர் செல்வி சா. ரஞ்சினி நிகழ்த்துவார்.

இரண்டாம் அரங்கு மாலை நிகழ்வுகள் 4.30 மணிக்கு நூற்றாண்டு விழா மண்டபத்தில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் அ. பஞ்சலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கலாநிதி துரைமனோகரன், வைத்திய கலாநிதி சிவன் சுதன் மற்றும் பாரியார் திருமதி சி.சுகன்யா, வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவனும் யு.என்.டி.பி. பொறியியலாளருமான ச. சசிகுமார் கலந்துகொள்வார். அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (2)

## நாட்டின் சகல மாவட்டங்களிலும் அருங்காட்சியகங்கள் அமைக்க முடிவு

(கொழும்பு)

நாட்டின் சகல மாவட்டங்களிலும் அருங்காட்சியகங்கள் அமைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் நாட்டின் சகல மாவட்டங்களிலும் அருங்காட்சியகங்கள் நிறுவப்படவுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சர் டாக்டர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க மாவட்டங்களில் முதலில் அருங் காட்சியகங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பல்வேறு தொல்பொருட்கள் இந்த அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## சதுரங்க சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தினால் நடாத்தப்படும் சதுரங்க சுற்றுப்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இல.40, கல்லூரி வீதியில் (யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம் முன்பாக) அமைந்துள்ள தேசிய வியாபார முகாமை நிறுவன மண்டபத்தில் நடைபெறும்.

இப்போட்டியானது தனிநபர், குழுநிலையென இருபிரிவாக இடம்பெறும். தனி நபருக்கான போட்டியில் 16 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கலாம். அத்துடன் தொழில்புரிவோர், மாணவர் என இரு பிரிவுகளாக நடாத்தப்படும்.

மேலும் குழுநிலை போட்டியானது மேற்குறித்த மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஓர் அணியில் நான்கு பேர் பங்குபற்ற வேண்டும். அத்துடன் இப்போட்டியாளர்கள் போட்டிக்கு சமுகமளிக்கும் போது சதுரங்கப் பலகைகளை கொண்டு வரும்படி கேட்கப்படுகிறார்கள். (2)

## மென்பானத்தை உரியவாறு விற்பனைக்கு வைக்காத வர்த்தகர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

மென்பான வகைகளை உரியவாறு களஞ்சியப்படுத்தி வைக்காத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

ஒருசில வர்த்தகர்கள் சூரிய ஒளிபடும் வகையில் மென்பானங்களை விற்பனைக்கு வைத்துள்ளதாக மாநகர சபையின் தலைமை பொது சுகாதார அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சூரிய ஒளியின் வெப்பத்தினால் மென்பானங்களில் மனித உடலுக்கு ஒவ்வாத இரசாயன மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்று அவர் கூறியுள்ளார்.

இரசாயன மாற்றங்கள் காரணமாக புற்றுநோய் காரணிகள் அல்லது மனித சுவாசக் கட்டமைப்பை செயலிழக்கச் செய்யும் தன்மை போன்ற உபாதைகள் ஏற்படக்கூடும் என பிரதீப் காரிய வசம் சுட்டிக்காட்டினார்.

மென்பான வகைகளை குளிரூட்டியில் அல்லது தமது வர்த்தகநிலையத்தில் வெப்பம் தாக்காத இடங்களில் களஞ்சியப்படுத்தி வைத்தல் குறித்து வர்த்தகர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்த நடைமுறைகளை பின்பற்றாத வர்த்தகர்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் கொழும்பு மாநகரசபை குறிப்பிடுகின்றது. (2)

நன்றி கூறுகின்றோம்



மாபெரும் மலிவு விற்பனை
போபிசன் எலெக்ரோனிக்ஸ்
இல.60, கே.கே.எஸ். வீதி, கொமர்ஷல் வங்கி அருகாமை, சுன்னாகம்
தொ.பே: 077 9472248 0217912752
Sony TV, DVD Player, Box Set, அம்பிளிபயர், Hi-Fi Set, Woober Set
எலெக்ரிக்கல் பொருட்கள் அனைத்தையும் விசேட விலைக்கழிவுடன் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
புதுவருடத்தை முன்னிட்டு 11.04.2011 முதல் 15.04.2011 வரையுமே இச்சலுகை சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
(4423)



# புற்றுநோய் ஆற்றுப்படுத்தல் நிலையம் அமைக்க ஹற்றன் நஷனல் வங்கி நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் ஆற்றுப்படுத்தல் நிலையம் அமைப்பதற்கு ஹற்றன் நஷனல் வங்கி பேண்தகு அபிவிருத்தி நிதியம் 7 இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

மேற்படி நிதியை இன்று ஞாயிற்றுக் கிழமை 10.30 மணிக்கு யாழ்ப்பாண வைத்தியசாலையின் புற்றுநோய் விடுதியில் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இராஜேந்திரா தியாகராஜா புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஜெயக்குமாரனிடம் வழங்கவுள்ளார்.

இத்திட்ட முன்மொழிவு ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானைக் கிளையினால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்வில் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ஜெயராஜசிங்கம், போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புற்றுநோயாளிகள், வைத்தியர்கள், தாதியர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தின் பலதரப்பட்டவர்களுக்கும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அது தொடர்பான நவீன மருந்துவமுறைகளை கற்றுக் கொள்வதன் மூலம் புற்றுநோயின் தாக்கத்தினை வடமாகாணத்தில் குறைப்பதற்கு ஓர் இயங்கு சக்தியாக இத்திட்டம் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

(4-3)

# பார்வையற்றவர்களுக்கான அகராதி வழங்கும் நிகழ்வு

சுன்னாகத்தில் இயங்கும் வாழ்வக நிறுவனத்துக்கு பார்வையற்றவர்கள் பயன்படுத்தக் கூடிய பிறேயில் எழுத்து வடிவில் அச்சிடப்பட்ட க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி க்ரியா இராமகிருஷ்ணனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நூல்தொகுதியை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு வாழ்வக நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகராதி இந்திய மொழிகளிலே முதன் முதலில் தமிழில் மாத்திரமே பிறேயில் எழுத்து முறையில் அச்சிடப்பட்டிருப்பதும் இலங்கையில் வாழ்வக நிறுவனத்துக்கே முதன் முதலாக வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(4-3)

# மோட்டார் சைக்கிள்-ஹயஸ் வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(கொழும்புத்துறை)

மோட்டார் சைக்கிளும் ஹயஸ் வாகனமும் மோதிய விபத்தில் தாயும் மகனும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் நல்லூர் நான்காம் சந்தியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

கச்சேரி நல்லூர் வீதியால் வந்த மோட்டார் சைக்கிளுடன் நாவலர் வீதியால் வந்த ஹயஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் திருநெல்வேலி பாற்பண்ணையைச் சேர்ந்த திருமதி சங்கர், குலேந்திரன் ஆகிய இருவருமே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து யாழ் .பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(3-51)

# டெங்கு நோய் தொற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை

சுகாதார அமைச்சு மற்றும் தொற்று நோய் பிரிவினால் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக பணிப்பாளர் வைத்தியர் பாலித்த மஹிந்தபால தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் நாளாந்தம் டெங்கு நோய் தொற்றாளர்களை இனங்காண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(2)

# வாரம் ஒரு தகவல்

## பார்வையும் பயணமும்

"தலையில் என்ன கட்டு?"

"எருமைமாடு ஒன்று எதிரில் வந்துமோதி விட்டது"

"பார்த்து நடக்கக்கூடாதா?"

"பார்த்துத் தான் நடந்தேன்"

"என்னத்தைப் பார்த்து நடந்தீங்க?"

"பக்கத்தில் ஒருத்தன் குரங்கு வித்தை காட்டிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்துக் கொண்டே நடந்தேன். எதிரில் வந்தது எருமைமாடு என்பதை நான் கீழே விழுந்து எழுந்த தன் பின்தான் தெரிந்து கொண்டேன்"

"பார்வையில்லாதவர்களெல்லாம் கூட எவ்வளவு பத்திரமாக நடந்து போகிறார்கள் தெரியுமா?"

"அப்படியா?"

"அவர்களுக்கெல்லாம் உபயோகப்படும் Sonic device ஐ அவுஸ்திரேலியாவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது பற்றரியில் இயங்கும் அலைகளை வெளியிடுகிறது."

"அப்படியா?"

"ஆமாம். சட்டைப்பையில் மைக்ரோபோன் இருக்கும். எதிரிலுள்ள தடைகளிலிருந்து பிரதிபலிக்கும் அலைகளுக்குத் தகுந்தாற்போல் காதுகளில் பொருத்தப்பட்ட மைக்குகளுக்கு 8 விதமான ஒலிகளை அது எழுப்பும். இந்த சத்தத்தை கேட்டுட்டு, நடப்பவர் எதிரிலுள்ள தடைகளை உணர்ந்து நடக்கலாம். வேகமாக நடப்பவர்கள் 3 மீற்றருக்கு முன்னாலுள்ள தடைகளைக் கூட உணர்ந்து கொள்ள முடியுமாம்"

"பரவாயில்லையே"

"இன்னொரு விடயம் தெரியுமா? இந்தக் கருவியை உருவாக்கியவர் டாக்டர் டோலி ஹேயஸ். இதைக் கண்டு பிடிக்கும் போது அவருக்கு கண்பார்வை இல்லையாம். அதன்பின் ஒரு கண்ணுக்கு மட்டும் பார்வை கிடைத்ததாம். அதன்பின் இந்தக் கருவியை இன்னமும் மேம்படுத்தினாராம்."

"நம்ம ஊரில் இது கிடைக்குமா?"

"கிடைக்குதாம். விலைதான் ஜாஸ்தி. 20400 ரூபாயாம்"

"குறைந்த விலைக்குக் கிடைத்தால் நல்லது. நானும் ஒன்றை வாங்கி மாட்டிக் கொள்ளலாம்"

"உங்களுக்கு அது தேவையில்லை"

"வேறென்ன தேவை?"

"பாதையில் எப்பொழுதும் பார்த்து நடக்க வேண்டும் என்ற புத்தி வந்தால் அது போதும்"

"அந்தப் புத்தி எனக்கு மட்டும் வந்தால் போதுமா?"

"பின்னே?"

"எருமைக்கும் வர வேண்டும்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

10.04.2011

பங்குனி 27,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சப்தமி பின்னிரவு 1.17 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 12.13 மணிவரை
இராகுகாலம் 4.36-6.06 மணிவரை
சுபநேரம் 9.06-10.36மணிவரை
நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் குருபூசைத்தினம் ,ஐந்தாம் தவக்கால ஞாயிறு

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முன்னேற் றம் ஏற்படும்.

**இடபம்** வருமானம் திருப்தி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உய ரும், வாக்கு மேன்மையால் பிறரை தம்வசப்படுத்துவீர்கள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்** ஆதவன் வழிபாட்டால் காரிய வெற்றியடைய வேண்டிய நாள், செலவுகள் அதி கமாகலாம், இட மாற்றம், ஊர் மாற்றம் செல்லும் எண்ணம் தோன்றும்.

**சிங்கம்** இனிமையான நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி** காலைப்பொழுதிலேயே நல்ல தகவல் வந்து சேரும், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்த மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** உடல் ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பழைய பொருட்களை மாற்றி புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும், சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்.

**மகரம்** கனிவான பேச்சுக்களால் காரியங்களைச் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு கிட்டும், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியம் கைகூடும்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் கல்யாண கனவுகள் நனவாகும், எடுத்த காரியம் கைகூடும்.

**மீனம்** உடன் பிறப்புகளால் உற்சாகம் பெருகும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை கொள்வீர்கள், பொருட் சேர்க்கையுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 |
| தக்காளி | 80 | 150 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 110 |
| கரட் | 150 | 200 | 160 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 35 | 50 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 140 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 70-80 | 50 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 70 |
| கரணைக்கிழங்கு | -- | 80 | 120 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | -- | 60 | 80 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 600 |
| போஞ்சி | 140 | 120 | 140 |
| கத்தரி தம்புள்ள | -- | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 12 | 20 | 30 |
| தேசிக்காய் | 60-70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

# உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கான வெளிநாட்டு கடன்கள்



## விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு ஆதரவு

இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களமானது இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

## கடன் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?

### 1ஆம் வகை

கம்பனியொன்றின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுகளை மேற்கொண்டுள்ள வணிகப் பொருள் ஏற்றுமதியாளர்கள
- சுற்றுலா
- சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கு நிலையங்கள்
- இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம்
- கப்பற்படுத்தல்
- உள்நாட்டு வான் பயணம்

### 3ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களிலுள்ள தனி உடமையாளர்களுக்கு, உடமையாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- ஆலோசனைப் பணிகள்
- அரச அதிகாரசபைகளுடன் பதிவு செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
- விளம்பரம் செய்தல், பிரசுரித்தல், புகைப்படமெடுத்தல்
- விளையாட்டுகள் தொடர்பான பணிகள்
- நவீன உடைகளின் வடிவமைப்பு மற்றும் திரைப்படத் தொழில்
- பொழுதுபோக்குக் தொழில் (சங்கீதம், நடனம், நிகழ்ச்சி முகாமைத்துவம் போன்றவை)

### 2ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களில் ஈடுபடும் கம்பனிகளுக்கு கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் பெருந்தோட்டம்
- மீன்பிடி
- உணவு பதனிடல்
- கல்வி மற்றும் பயிற்சி
- வலு உருவாக்கம் மற்றும் கடத்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- மருத்துவமனைகள் மற்றும் நலம் மற்றும் நலக் கவனிப்புப் பணிகளின் வழங்கல்
- வர்த்தக ரீதியிலான வீடமைப்பு நிர்மாணம்
- வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம்
- பாரிய போக்குவரத்து
- சுற்றாடல் பாதுகாப்பு
- பல்பொருள் அங்காடி
- ஊர்திகளைப் பொருத்துதல்
- துறைமுகங்கள் மற்றும் துணைப் பணிகள்
- கைத்தொழில் பூங்காக்கள்
- நகர உட்கட்டமைப்பு (நீர் விநியோகம், சுகாதார மற்றும் வடிகால் செயற்றிட்டங்கள்)
- தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவோர்
- பாரிய கைத்தொழில்கள் மற்றும் தயாரிப்பு

## கடன் வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் யார் ?

- பன்னாட்டு வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகள்
- பல்புடை நிதியியல் நிறுவனங்கள்
- கடன்பெறும் கம்பனிகளின் வெளிநாட்டு பங்குடமையாளர்கள் அல்லது தாய்க் கம்பனிகள்
- ஏற்றுமதிக் கொடுகடன் முகவர்கள்
- தனிப்பட்ட கடன்வழங்குநர்கள்: வதியும் நாட்டில் அவன்/ அவள் வரி செலுத்துவர் என்ற சான்றுடன் கூறப்பட்ட வங்கியுடன் அவன்/ அவள் கணக்கைப் பேணுவதாக அவனது/ அவளது வதியும் நாட்டின் வங்கியாளரிடமிருந்து உறுதிப்படுத்தலை அளிக்குமிடத்து

## கடன்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நியதிகள் எவை?

**கடன் பெறவேண்டிய ஆகக் கூடிய தொகை:** ஐ.அ.டொலர் 20 மில்லியன்

**மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி:** கடன் பெறுகைகளைப் பெற்ற திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள்ாக இருத்தல் வேண்டும

**கடன் பெறுவதற்கான செலவு:** கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான பிரயோகிக்கத்தக்க வட்டி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளும் இரண்டாந்தரச் சந்தையில் தற்போதைய இலங்கையின் நாட்டுக்கான பன்னாட்டு முறி வீதம் + 200 அடிப்படைப்புள்ளிகளை விஞ்சுதலாகாது

## கடன் பெறக்கூடிய நோக்கங்கள் எவை?

தொழிற்படு மூலதனம், வியாபாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு, கம்பனியை மீள அமைத்தல் அல்லது ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் விபரங்கள் மற்றும் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பபத்திரத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான **www.cbsl.gov.lk** இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து **011-2477358** அல்லது **011-2477000 – நீட்டம் 3126.**

பி. எச். ஓ. சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# இலங்கையில்

# விக்கிலீக்ஸ் இணையத்தள உரிமையாளர் இருந்திருந்தால் சாம்பலும் எஞ்சியிருக்காது

## சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் உரிமையாளர் இலங்கையில் இருந்திருந்தால் அவரது சாம்பலும் மிஞ்சியிருக்காது என ஜனநாயக தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகத்துறை மீதான தாக்குதல்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் தணிக்கையுடனேயே உரையாற்றும் நிலைமை உருவாகியுள்ளது. இணையத்தளங்களை தணிக்கை செய்ய முடியுமென நீங்கள் நினைக்கின்றீர்களா? என்று நாடாளுமன்றத்தில் சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பினார்.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் இலங்கையில் இருந்திருந்தால் சாம்பலும் மிஞ்சியிருக்காது. உலகிலேயே கொடூரமான பயங்கரவாதிகளை ஒழித்த இராணுவம், பொலிஸ், உளவுப் பிரிவினர் எம்மிடம் உள்ளனர்.

அப்படியெனில் ஏன் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாது. குற்றங்களை மறைக்க மறைக்க அது மேலும் மேலும் வெளிவரும் என சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (2-4)

# கண்ணிவெடிகளை அகற்ற அவுஸ்திரேலியா 48கோடி ரூபா நிதியுதவி வழங்கவுள்ளது

அவுஸ்திரேலியாவில் அரசாங்கம் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள 48கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

தரைக்கண்ணி விழிப்புணர்வு தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட இம்மாதம் 4 ஆம் திகதியே இந்நிதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடிகளையகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு இந்நிதி பெரும் உதவியாக இருக்கும் என அவுஸ்திரேலிய தூதுவராலயம் தெரிவித்துள்ளது. (2-4)

# உலகின் நான்கு இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட சாத்தியம்

(கொழும்பு)

அடுத்த இரண்டு வாரங்களில் உலகின் வெவ்வேறு இடங்களில் மேலும் நான்கு பாரிய நிலநடுக்கங்கள் ஏற்படக் கூடும் என இலங்கை புவியியல் நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

கிரக நிலைகளை அடிப்படையாகக் கொண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியல் ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் அதுல சேனாரத்ன இந்த எதிர்வு கூறலை வெளியிட்டுள்ளார்.

இந்திய மற்றும் பசுபிக் சமுத்திர வலயங்களில்உள்ளநாடுகளிலேயே நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் நிலவுவதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

கிரகநிலைகளை அடிப்படையாகக் கொண்டு கடந்த இரண்டு வாரங்களாக வெளியான எதிர்வு கூறல்களின் பிரகாரம் உலகின் பல்வேறு இடங்களில் நில அதிர்வுகள் இடம்பெற்றுள்ளதாக பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

20

**APRIL. 2011 TO SEPT.2011**

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோபா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011

(சி/2903)

# க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு பாராட்டு

(கொழும்பு)

கடந்த வருடம் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் அதி கூடிய சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் நிகழ்வொன்று ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 134 மாணவர்களுக்கு பரிசில்கள், பதக்கம் மற்றும் புலமைப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்ள மாணவர்களை சிறப்புரிமை பெற்றவர்களாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜப்கஷ முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளுக்கு சகல மாணவர்களும் நன்றி செலுத்துவதாக இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய க.பொ.த சாதாரண தர பரீட்சையில் நாடளாவிய ரீதியாக அதி சிறப்பு சித்தி எய்திய கொழும்பு விசாகா வித்தியாலய மாணவி ஒருவர் தெரிவித்துள்ளார். (2-4)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

குப்பிளான் கன்னிமார் ஆலய உற்சவ காலத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு 'சமயவாழ்வு' என்னும் தலைப்பில் சைவப்புலவர் பண்டிதர் பொன். சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (3-35)

# கிழக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த 2009 மற்றும் 2010 ஆம் கல்வியாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அனைத்துப்பீடங்களையும் சேர்ந்த சகல மாணவர்களுக்குமான 2009 மற்றும் 2010 ஆம் கல்வியாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள அனைத்து மாணவர்களுக்கும் தத்தமது விடுதிகளுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வருகைதர முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளரைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# கொக்காவில் பகுதியில் இராணுவம் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை

யாழ்.கொக்காவில் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

மிதிவெடி அகற்றும் மிகப்பெரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமைப்பாக இலங்கை இராணுவம் உள்ளது. மேலும் எவ்.எஸ்.டித மைனெக்ஸன்த ஹலோ டிரஸ்ட் ஆகியனவும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றுவதில் ஈடுபட்டுள்ளன.

மிதிவெடி ஒன்றை புதைப்பதற்கு 3 டொலர்கள் செலவிடப்படுவதாகவும் அதனை அகற்றுவதற்கு 1000 டொலர்கள் செலவிடப்படுவதாகவும் ஐ.நா.மதிப்பிட்டுள்ளது. (2)

# நாட்டின் கடற்பிரதேசத்தை உள்ளடக்கி ஆழிப்பேரலை அனர்த்த கோபுரங்கள்

(கொழும்பு)

முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் ஆழிப்பேரலை அனர்த்த கோபுரங்கள் ஸ்தாபிக்கப் படவுள்ளன.

இந்த தகவலை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய 25 ஆழிப்பேரலை அனர்த்த கோபுரங்களின் நிர்மாண பணிகள் எதிர்வரும் மாதங்களில் நிறைவடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்ஆழிப்பேரலை அனர்த்த கோபுரங்கள் நாட்டின் கடற்பிரதேசங்களில் நிறுவப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

# நெடுந்தீவுக் கடலில் கரையொதுங்கிய சடலத்தை அடையாளம் காண இந்திய மீனவ குடும்பம் வருகை

(கொழும்பு)

நெடுந்தீவு கடற்பரப்பில் அண்மையில் மீட்கப்பட்டுள்ள சடலத்தை அடையாளம் காண தமிழ்நாடு இராமேஸ்வரம் மீனவர் குடும்பமொன்று யாழ். குடாநாட்டிற்கு வருகைதரவுள்ளது. நெடுந்தீவு கடற்கரையில் மீட்கப்பட்ட சடலம் இராமேஸ்வரம் மீனவருடையதா என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனால் காணாமல் போன மீனவரது குடும்பம் சடலத்தை அடையாளம் காண யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

அத்துடன் காணாமல் போன ஏனைய மூன்று மீனவர்களின் குடும்பங்களையும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (2-4)

# கொழும்பில் அபிவிருத்தி திட்டம் முன்னெடுப்பு

கொழும்பில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுத்து செல்லப்படுவதாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் கொலன்னாவ தொகுதி பிரதான அமைப்பாளரும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பாளருமான ஆர். துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (2-4)




★1658 - ஊர்காவற்துறை கோட்டை டச்சுக்காரரினால் கைப்பற்றப்பட்டது.

★1710 - காப்புரிமை பற்றிய முதலாவது சட்ட விதிகள் பிரித்தானியாவில் வெளியிடப்பட்டன.

★1741 - புரூசியா ஆஸ்திரியாவை மோல்விட்ஸ் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் வெற்றி கண்டது.

★1790 - ஐக்கிய அமெரிக்காவில் காப்புரிமம் (Patent) பற்றிய விதிகள் எழுதப்பட்டன.

★1815 - இந்தோனேஷியாவில் டம்போரா மலை தீக்கக்கியதில் பல தீவுகள் அழிந்தன. 71, 000 பேர் கொல்லப்பட்டனர்.

★1821 - கொன்ஸ்டண்டீனோபோலின் ஆயர் ஐந்தாம் கிரெகோரி துருக்கியர்களினால் தூக்கிலிடப்பட்டார்.

★1826 - துருக்கியப் படைகளின் ஆக்கிரமிப்பை அடுத்து மெசோலோங்கி என்ற கிரேக்க நகரில் இருந்து 10, 500 பேர் நகரை விட்டு வெளியேறினர். இவர்களில் மிகச் சிலரே தப்பினர்.

★1848 - இங்கிலாந்தில் கிரேட் யார்மூத் நகரில் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 250 பேர் கொல்லப்பட்டனர்.

★1857 - இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக இந்தியாவின் மீரூட் என்ற இடத்தில் சிப்பாய்க் கிளர்ச்சி வெடித்தது.

★1864 - முதலாம் மாக்சிமிலியன் மெக்சிக்கோவின் மன்னனாக முடி சூடினான்.

★1868 - அபிசீனியாவில் அரோகீ என்ற இடத்தில் பிரித்தானிய மற்றும் இந்தியக் கூட்டுப் படைகள் தியோடர் மன்னனின் படைகளை வெற்றி கண்டன. 700 எதியோப்பியப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். இந்திய/பிரித்தானியப் படையினரில் இருவர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

★1869 - கியூபாவில் கியூபா புரட்சிக் கட்சி ஜொசே மார்ட்டீயினால் ஆரம்பிக்கப்பட்டது.

★1912 - டைட்டானிக் பயணிகள் கப்பல் தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை இங்கிலாந்தின் சௌதாப்ம்டன் துறையில் ஆரம்பித்தது.

★1919 - மெக்சிக்கோ புரட்சித் தலைவர் எமிலியானோ சப்பாட்டா அரச படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1963 - ஐக்கிய அமெரிக்காவின் த்ரெஷர் என்ற நீர்மூழ்கி 129 பேருடன் காணாமல் போனது.

★1972 - வியட்நாம் போர்: அமெரிக்க விமானங்கள் வடக்கு வியட்நாமில் குண்டுகளை வீசின.

★1979 - டெக்சாஸ் மாநிலத்தில் விச்சிட்டா அருவியில் சுழல்காற்று தாக்கியதில் 42 பேர் கொல்லப்பட்டனர்.

★1991 - இத்தாலியின் மொபி பிரின்ஸ் என்ற பயணிகள் கப்பல் லிவோர்னோவில் எண்ணெய் தாங்கிக் கப்பல் ஒன்றுடன் மோதியதில் 140 பேர் கொல்லப்பட்டனர்.

★1992 - லண்டனில் 30 சென் மேரி அக்ஸ் என்ற கட்டடம் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் குண்டுவெடிப்பால் அழிந்தது.

★1998 - அயர்லாந்து குடியரசுக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் வட அயர்லாந்து குறித்த பெல்பாஸ்ட் உடன்பாடு எட்டப்பட்டது.

★2006 - இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் மீரட் நகரில் வர்த்தகக் கண்காட்சி ஒன்றில் ஏற்பட்ட தீயில் 60 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1870 (பழைய முறை)- விளாடிமிர் லெனின் (இ. 1924)

★1887 - பெர்னாடோ ஹொசே, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1971)

★1898 - ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவாளர், உளவியல் வல்லுநர் (இ. 1878)

★1917 - ரொபேர்ட் வூட்வார்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1979)

★1918 - ஜோர்ன் அட்சன், சிட்னி ஒப்பேரா மாளிகையை வடிவமைத்தவர் (இ. 2008)

★1927 - மார்ஷல் நிரென்பேர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.

### இறப்புகள்

★1585 - பாப்பரசர் 13 ஆவது கிரெகரி, (பி. 1502)

★1688 - பெர்னாவோ டி குவைறோஸ், இந்தியாவில் சமய போதகராக வந்த போர்த்துக்கல் நாட்டவர் (பி. 1617)

★1931 - கலீல் ஜிப்ரான், லெபனான் கவிஞர், ஓவியர் (பி. 1883)

★1995 - மொரார்ஜி தேசாய், இந்தியாவின் முன்னாள் பிரதமர் (பி. 1896)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### என்றென்றும்

வெறுமையான என் நெஞ்சுக்குள்
காதல் எனும் பயிர் விதைத்து
என் கண்ணீரை கொண்டு
வளரவிட்டாய்–இன்றும்
உன் நினைவுகள் மட்டுமே–என்
நெஞ்சில் அழியாத சித்திரமாய்

கே.கார்த்திகா
விஸ்வமடு

### பொய்வேசம்

வறுமையின் உச்சக்கட்டத்தில்
வலிகளை உண்டு
மீள முடியாத துயரில்
மூழ்கி நான் தத்தளித்தபோது
மீட்டு கரை சேர்க்க
முன்வராத என் உறவுகள்
மூத்தெடுத்து நான்
மீண்டெழுந்து வந்த போது
உறவென்று உரிமையோடு
என் நலம் விசாரிக்கின்றன

சி.தமிழினி
சுன்னாகம்

### படைப்பு

உன் நினைவுகளால் ஆன
என் கனவுகளுடன்
உணர்வுகளை கலந்து
தினம் தினம் வரைகின்றேன்
உன்னை கவிதைகளாக...

எஸ்.ரிஷிகேஷன்

### துளிர்ப்பு

யார் என்னை கைவிட்டாலும்
நீ என்னை கைவிடமாட்டாய்
என்று நினைத்தேன்
ஆனால் நீயும் என்னை
கைவிட்டு விட்டாயே!
நான் தனித்துப் போனதாய்
உணர்ந்தேன்
நீ எங்கு வாழ்ந்தாலும்
சந்தோசமாய் வாழ்
என் வாழ்க்கை ரயில்
தடம்புரண்டு போயினும்
கொஞ்சம் கூட அசையாமல்
கிடக்கிறதே என்
நம்பிக்கை தண்டவாளம்
அது எனக்கும் போதும்
மீண்டும் என் வாழ்க்கை
ரயில் ஓடும்

உயிரோவியன்

### அவரவர் பார்வையில்

**கல்வி**
பச்சை மரத்தில்
முச்சையாய் அறைந்த
மூன்றாணிகள் கொண்ட
முழுமுதல்
**திருமணம்**
ஆண்–பெண் இணைந்து
கணவன்–மனைவியாய்
மணந்து கொள்ளும்
மலர்மாலை
**தாடி**
தாடியென்று கேட்ட
இதயத்தை
தரமறுத்து விட்டதால்
போடி என்று
வைத்துக்கொண்டது

ஜெ.ஜெகன், புதுக்குடியிருப்பு

**கல்வி**
சொர்க்கத்திற்கு வழி
காட்டும் ஓர் பாதை
**தாய் அன்பு**
எல்லோர்க்கும் நீண்டநாள்
இருக்காது
இருந்தால் வாழ்வில் இன்பம்

கு.குலமகள், யாழ்ப்பாணம்

### தீயில் தேசம்

நெருப்பில்
வேகிறது வறுமை உணர்வுகள்
வடிகட்டி எடுக்கப்படுகின்றது
வம்சச்சாம்பல்களில்
ஏழைகளின் கண்ணீர்
பிணம் தின்னும்
கழுகுகள் நடுவில் மனிதம்
பணத்துடன் சவக்குழிகளை
மணமுடிக்கிறது
ஒப்பாரி இராகத்தில்
சந்தோசத்தை காணத்துடித்து
ஏக்கத்தில் தமிழனின் தலைவிதி
மாறிப்போனது
ஒவ்வொரு இதயத் துடிப்பிலும்
கசிந்து கொண்டேயிருக்கும்
பரிதவித்த கணங்கள்...

ஜே.எஸ்.ராஜ்
யாழ். பல்கலைக்கழகம்

### தனிமை

தனிமையிலே இருந்து வாழ்ந்தேன்
உன்னோடு பழகும் முன்பும்
தனிமையிலே இருக்கிறேன்
நீ போன பின்பும்
உனக்கான தனிமை
தொடர்கிறது...

செ.சக்தி, சண்டிலிப்பாய்

### இமயம் தொட...

வாழ்வில்
உனக்கு விதிக்கப்பட்டது
தண்டனைகள் அல்ல
தருணங்கள்
உனக்குக் கிடைத்த
தருணங்களை
முடிந்தவரை வெற்றியாக்கு
வேகத்திலும் விவேகம் இருந்தால்
தருணங்கள் வெற்றியாகும்

மாவை. நா.கஜேந்திரா

### தீயாக...



கூண்டில் அடைக்கப்பட்ட
பறவைதான்
பாலை நிலத்தில்
பணிப்பெண்கள்
பணத்துக்காய்வந்து
அரேபியர்களின்
பாவச் செயல்களால்
கொதிக்கும்
பெண் இதயங்கள்
கடல் கடந்து வந்து
வெறியர்களின்
கழுகுப் பார்வையில்
சிக்கும் பெண்ணின்
நிலை பரிதாபம்
அன்று கண்ணகி எரித்தாள்
மதுரையை
இன்று எரிகிறாள் பெண்
பாலை நிலத்தில்...

எஸ்.பகிரதன், பசுத்தீவான்

## மௌனத்தின் தேடல் – 65



### அறிவீரோ?

வரிசையில் காத்திருப்பது
சலுகைகளுக்காக மட்டுமல்ல
வாழ்க்கையின் ஒவ்வொரு
கணங்களையும்
தொலைத்து விட்டுவாழும்–எம்
எதிர்காலத்திற்காகவும்தான்

ப.பிரசாத்
அரசபுரம், பூநகரி.

### மாறுங்கள்!

மனங்களே மாறுங்கள்
இந்த அபலைகளின்
இருள் வாழ்வுக்கு
ஒளி கொடுங்கள்

எஸ்.அனுஷ்யா செரோமி
சிறுவர் இல்லம், இருபாலை.

### தொடர்கிறது...

சொந்தக்கால்களை
இழந்து நாம்
சொந்தங்களின்
கால்களில் இன்று
நீள்கிறது எம்துயர்
வரிசையாக...

ஜே.கீர்த்தனன்
பருத்தித்துறை

### எதிர்பார்ப்பு

சொந்த ஊரிழந்து
சொந்தங்களையும்
பறி கொடுத்து
அகதிக் கூடமதில்
மிச்சமென்றிருப்பவர்
நாங்கள் தான்
எங்களின் எதிர்பார்ப்பு
எப்போதுதான் நிறைவேறும்

ஆஷா
யாழ்ப்பாணம்

### உறவை தேடி

ஈன்றோரை இழந்து
விழி நீர் சொரியும்
இவனுக்கு இனி
ஆறுதல் யாரோ?

லி.கேனுஜன்
யாழ்ப்பாணம்

### தேடல்

ஊர்ந்து நகர்ந்து
ஊமை விழிகளால்
உறவுகளைத் தேடும்
உயிரோவியங்கள்

கே.ரஞ்சித் விஜயகுமார்
யாழ்ப்பாணம்

### வாழ்வின்நிலை

கண்களில் நீருடன்
தோள்களில்
குழந்தையுடன்
வரிசையில் நின்று
வாழும் அவலநிலை
என்று தீருமோ

சி.சிவறாஜி
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### ஏக்கம்

நீருக்கும் வரிசை
உணவுக்கும் வரிசை
வரிசையில்லாமல்
தமிழர் வாழ்க்கையில்லை

சி.சுகிர்தா
யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### காத்திருப்பு

இயற்கையின் சீற்றத்தால்
இயல்பு வாழ்வு இழந்தவர்கள்
ஒருவேளை உணவிற்காய்
நீண்ட வரிசையில்
காத்து நிற்கிறார்களோ?

வி.அபிசன்
அல்லையம்பதி

### தேடுதல்

குற்றமற்ற ஏழைகளைச்
சுற்றி வளைத்து
தேடுதல் நடத்த
பெற்ற பிள்ளைகளை
மார்பில் அணைத்தபடி
கொளுத்தும் வெயிலில்

ஆராதனா
தென்மட்டுவில்

### ஊமைகளாய்

பாவத்தின் சுமைகளோடு
ஊமைகளாய் ஊர்ந்திடவே
காலத்தின் கோலத்தால்
ஞாலத்தில் காய்ந்திடவே
மௌனத்தின் பயணம்
தொடர்கிறதே...!

ஆர்.ஜெயா, அராலி

### வாழ்க்கை

வைத்தியசாலையிலும்
வரிசையாம்
நிவாரணக்கடையிலும்
வரிசையாம்
குடி நீருக்கும்
வரிசையாம்
எம் வாழ்க்கையே வரிசை

பு.அரிராம்
தரம்-6 யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்
பருத்தித்துறை

### ஏக்கம்

அநாதை ஆகிவிட்டோமே
என்று ஏங்கும் மனம்
யாராவது தன்னை ஆதரிப்பாரோ
என்று தேடும் கண்கள்
எத்தனை எத்தனை குழந்தைகள்...

ச.சயோறன்
சண்டிலிப்பாய் இந்து கல்லூரி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 66



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 16.04.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தி.மு.க ஆட்சி மாறினால் சலுகைகள் கிடைக்காது

## மணிசங்கர் ஐயர் தெரிவிப்பு



(காரைக்கால்)

எந்த ஆட்சி மத்தியில் உள்ளதோ அதே ஆட்சி புதுச்சேரியில் இருந்தால் தான் கேட்டதையெல்லாம் பெற முடியும் என மணிசங்கர் ஐயர் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். தி.மு.க வேட்பாளர் நாஜிமை ஆதரித்து முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் ஐயர் நேற்று முன்தினம் மாலை பிரசாரம் செய்தார்.

ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர் நாஜிமை வெற்றி பெறச் செய்ய வேண்டும். வேறு நபர்கள் வெற்றி பெற்றால் பாதிப்பு உங்களுக்குத்தான். கடந்த 5 ஆண்டுகள் புதுச்சேரியில் எந்த கட்சி ஆட்சியில் உள்ளதோ அதே கட்சியின் ஆட்சி மத்தியில் உள்ளது. தமிழகத்திலும் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மத்தியில் இருந்து ஒரு இலட்சம் கோடி ரூபாய் தமிழகத்திற்கு நிதி கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து கருணாநிதி பல நல்ல திட்டங்களை செயற்படுத்தியுள்ளார்.

அதேபோன்று புதுச்சேரி முதல்வர் நல்ல திட்டங்களை செய்துள்ளார். இவர் மக்கள் மேம்பாட்டிற்காகவும் நலனுக்காவும் நிறைய செய்துள்ளார். அத்தகைய கூட்டணி ஆட்சியை மாற்றினால் அதை திரும்பவும் உருவாக்க முடியாது. மத்தியில் அடுத்த 3 வருடத்திற்கு காங்கிரஸ் ஆட்சி நடக்கும். எனவே இங்கு ஆட்சி மாறினால் அடுத்த 3 ஆண்டிற்கு சலுகைகள் கிடைக்காது.

சிறிய மாநிலமான புதுச்சேரியில் கல்வி, சுகாதாரம், சாலை வசதிகள், விவசாயம் மேம்படுத்தப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. தேர்தல் நாளில் அனைவரும் அவசியம் வாக்குப்போட வேண்டும். நீங்கள் 5 நிமிடங்கள் வாக்குப்போடும் வேலை செய்தால் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நாங்கள் உங்களுக்கு வேலை செய்வோம் என்று கூறினார். (4)

## காலக்கெடு முடிவு

தனி நபரை விமர்சனம் செய்த ஜெயலலிதா விஜயகாந்த் விளக்கம் தருமாறு தேர்தல் ஆணையம் விதித்த கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது. தேர்தல் பிரசாரத்தின் போது முதல்வர் கருணாநிதி மற்றும் அவரது குடும்பத்தினரை பற்றி அவதூறாகவும் நாகரிக மற்ற முறை யில் பேசியதாகவும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா , தே.மு.தி.க. தலைவர் விஜய காந்த் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க.வினர் புகார் கொடுத்தனர்.

பிரசாரத்தில் இருப்பதால் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று எழுத்து மூலமாக 2 கட்சிகளின் சார்பில் கேட்கப்பட்டது. தேர்தல் ஆணையம் சார்பில் 2 நாள் அவகாசம் வழங்கப்பட்டது. இந்த அவகாசம் நேற்று மாலையுடன் முடிவடைந்துள்ளது. (4)

# விஜயகாந்தின் முதல்வராகும் கனவு பலிக்கப்போவதில்லை

## திருமாவளவன் தெரிவிப்பு



விஜயகாந்த் கதை இந்தத் தேர்தலுடன் முடிந்துவிடும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறினார். ஆர்.கே. தொகுதி திமுக வேட்பாளர் சேகர்பாபுவை ஆதரித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நேற்று முன் தினம் பிரசாரம் செய்த[illegible]. அங்கு அவர் உரையாற்றுகையில்,

இந்தத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளை மதிக்கும் மரியாதையுடன் நடத்தும் தலைவர் கருணாநிதி தலைமையில் ஒரு கூட்டணியும் எதிர்தரப்பில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் ஒரே மேடையில் பிரசாரம் செய்ய முடியாத நிலையில் ஒரு கூட்டணியும் உள்ளது.விஜயகாந்த் கதை இந்த தேர்தலுடன் முடிந்து விடும். அவரது முதல்வர் கனவும் பலிக்கப்போவதில்லை.

தேர்தல் பிரசாரத்தில் பேசிய விஜயகாந்த் தனது கட்சி சின்னம் 'கொட்டும் முரசு என்பதை குட்டும் முரசு என்கிறார். அண்டப்புழுகு ஆகாசப்புழு என தினமும் பொய் பேசுகிறார். இது போன்ற மக்கள் விரோத கூட்டணி ஜெயிக்க வேண்டுமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள். கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி அதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைந்துள்ளனர். இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார். (4)

# தனது கட்சிச் சின்னத்தை தவறாக கூறிய விஜயகாந்

## விசனத்தில் தொண்டர்கள்

கொட்டும் முரசு சின்னத்தில் அதிமுக வேட்பாளருக்கு வாக்குப் போடுங்கள் என விழுப்புரத்தில் விஜயகாந்தின் குழப்பமான பேச்சால் கூட்டணி வேட்பாளர்களும் தொண்டர்களும் வெறுப்படைந்தனர். கோலியனூரில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் நேற்றுமுன் தினம் மதியம் பிரசாரம் செய்தார். அப்போது வராமல் இருந்ததற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். என் மானசிக குரு எம்ஜிஆர் ஆரம்பித்த கட்சியுடன் தான் கூட்டணி வைத்திருக்கிறேன் என்று பேசிக் கொண்டிருந்தார்.

தன்பேச்சின் நிறைவாக விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் சண்முகத்துக்கு கொட்டும் முரசு சின்னத்தில் வாக்குப் போடுங்கள் என்று திடீரென குழம்பி விட்டார். பின்னர் அருகில் இருந்தவர்கள் கூறியதால் சுதாரித்துக் கொண்டு கொடியை பார்த்ததால் மாற்றி கூறிவிட்டேன். இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு போடுங்கள் என்றார்.

ராமமூர்த்திக்கு வாக்கு போடுங்கள் என்று மட்டும் பேசினார். கட்சியின் பெயரையோ, சின்னத்தையோ குறிப்பிடாமல் விட்டுவிட்டார் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொண்டர்கள் வெறுப்படைந்தனர். எம்ஜிஆர் ஆரம்பித்த கட்சியுடன் கூட்டணி என்று கூறுகிறாரே தவிர அதிமுக பெயரையோ ஜெயலலிதா பெயரையோ விஜயகாந்த் சொல்வதில்லை என கூட்டணி வேட்பாளர்களும் தொண்டர்களும் ஆதங்கப்படுகின்றனர். பிரசார பயணத்தில் வேட்பாளர் பெயரை தவறாகவும் சின்னத்தை தவறாக குறிப்பிடும் விஜயகாந்தின் குழப்பமான பேச்சு விழுப்புரத்திலும் நீடித்ததால் பரபரப்பு எற்பட்டது. (4)




# ஐந்து பெண்களை பெற்றவர்களும் தி.மு.க ஆட்சியில் சுகவாசி

## நிறுவுநர் ராமதாஸ் தெரிவிப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதியில் தி.மு.க கூட்டணி சார்பில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் முனியம்மாள் கனியமுதனை ஆதரித்து மத்தூரில் பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் பிரசாரம் செய்தபோது கூறியதாவது,

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, காஸ் அடுப்பு, இலவச கலர் டிவி, கர்ப்பிணி உதவி தொகை, உட்பட பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு திட்டங்களை வழங்கி வரும் ஆட்சியாக முதல்வர் கருணாநிதியின் ஆட்சி திகழ்கிறது. 10 ஆண்டுகால ஆட்சியில் இருந்த போது ஜெயலலிதா என்ன செய்தார்? இளைஞர்கள் படித்து நாகரிகத்தை வளர்க்கும் இந்த காலகட்டத்தில் ஆடு, மாடு வழங்குவேன் என்று தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஐந்து பெண்களை பெற்றால் அரசனும் ஆண்டியாவது அந்த காலம். ஐந்து பெண்களை பெற்றாலும் சுகவாசியாவது முதல்வர் கருணாநிதி ஆட்சியில்தான். 6 ஆவது முறையாக கருணாநிதியை மீண்டும் முதல்வராக்க வேண்டும். எனவே வரும் தேர்தலில் முனியம்மாள் கனியமுதனுக்கு மெழுகுவர்த்தி சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெற செய்ய வேண்டும் இவ்வாறு ராமதாஸ் கூறினார். (4)

# ஏழைகளின் துயரைப் போக்கியவர் கருணாநிதி

## தங்கபாலு தெரிவிப்பு



ஏழைகளின் துயரை போக்கியவர் கருணாநிதி என்று தங்கபாலு பேசினார். சென்னை மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடும் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு ஏழை மக்களின் வறுமையை அறிந்து அவர்களின் வயிற்றுக்கு உணவு அளித்தார். ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு கொடுத்து துயரை போக்கினார். கருணாநிதிதான் முதல்வர் என்று நாம் சொல்கிறோம். ஆனால் எதிர் அணியினர் யார் முதல்வர் என்று இதுவரை கூறவில்லை.

அடுத்த முதல்வர் கருணாநிதிதான் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் சொன்னார். எண்ணற்ற சாதனைகளை மத்திய மாநில அரசுகள் செய்துள்ளன. இந்த பகுதியில் உள்ள குடிசைகள் அகற்றப்படமாட்டாது என உறுதி அளிக்கிறேன். ஆனால் எதிர் அணியினர் வந்தால் குடிசைகளை அகற்றுவார்கள். எனவே தி.மு.க கூட்டணி வேட்பாளரான என்னை வெற்றி பெறச் செய்ய கை சின்னத்தில் வாக்களியுங்கள் இவ்வாறு தங்கபாலு உரையாற்றினார். (4)

# கூடுதல் விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

நிர்ணயவிலையை விட கூடுதல் விலைக்கு அரிசி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்கள் ஆயிரம் பேருக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த சில வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளையடுத்து குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கூடுதல் விலைக்கு அரிசி விற்பனையில் ஈடுபடுகின்ற வர்த்தகர்களை கண்டுபிடிக்கும் பொருட்டு தொடர்ந்தும் திடீர் பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பணிப்புரை வழங்கியுள்ளதாக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நடமாடும் திடீர் பரிசோதகர் குழு வொன்றை ஈடுபடுத்தி சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை அநுராதபுரம் மாவட்டத்தில் நுகர்வோர் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் வர்த்தகர்களிடம் இருந்து ஏழு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை அபராதமாக அறவிடப்பட்டுள்ளது. (2-4)

# காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்

இலங்கை அரசாங்கம் காணாமல் போனவர்கள் தொடர்பில் பதில் சொல்லியே ஆக வேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் போர்க்குற்றம் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பில் நேற்று முன்தினம் வெளியான மனித உரிமை கண்காணிப்பக ஆசிய பிரதிநிதி பிரட் அடம்ஸின் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு கடத்தப்பட்ட ஏராளமான தமிழ் இளைஞர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் காணாமல் போயுள்ளனர்.

இவர்களின் பெற்றோர்கள் எல்லோரிடமும் ஏன் இலங்கை அரசிடமும் அதன் நல்லிணக்க ஆணைக்குழுவிடமும் முறையிட்டும் இதுவரை எந்த பயனும் கிடைக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கை இந்த மாதம் வெளியாகவுள்ள நிலையில் மனித உரிமை கண்காணிப்பகமும் தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட 20 பேர் அரச படைகளினால் உயிருடன் பிடிக்கப்பட்டோ சரணடைந்தோ இருக்கின்றமைக்கான ஆதாரங்கள் தெளிவாக உள்ளன.

ஆனால் அவர்கள் இல்லையென அரசாங்கம் கூறுகின்றது. ஒட்டு மொத்தமாக சரணடைந்த புலிகளின் உறுப்பினர் மற்றும் கைது செய்யப்பட்ட, காணாமல் போன தமிழ் இளைஞர்களுக்கு இலங்கை அரசே பதில் கூற வேண்டும் என கூறப்பட்டுள்ளது. (2-4)

## செயலமர்வு

வடமராட்சி வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் 2011ஆம் ஆண்டுக்கான இரசாயனவியல் மாதிரி வினாத்தாள் புத்தகத்தையும் எடுத்து வருமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள உபகுழு நியமனம்

(கொழும்பு)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களின் போது அதிகார சபை தலையீடு செய்யக்கூடியவாறான அதிகாரங்களை விஸ்தரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க குறிப்பிட்டார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தண்டனை சட்டக் கோவை மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் தொடர்பான சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து இந்தக் குழு ஆராயவுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு உபகுழுவானது சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமென அனோமா திஸாநாயக்க கூறினார்.

இது தொடர்பாக உப குழு ஏற்கனவே தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார். (2-4)

# இலங்கை- பாகிஸ்தான் உறவு பலதுறைகளிலும் மேம்பட்டுள்ளது

(கொழும்பு)

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினாரப்னி காருக்கும் பாகிஸ்தானுக்காக இலங்கை உயர்ஸ்தானிகர் எயார் சீப் மார்சல் ஜயலத் வீரக் கொடிக்கும் இடையேயான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இருநாடுகளின் செயலாளர்கள் மட்டத்தில் ஆலோசனைகளை மேற்கொள்வது குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது. இதுதவிர இந்தப் பேச்சுவார்த்தையின் போது 10ஆவது பொருளாதார கூட்டுக் குழுவினை நிகழ்த்துவதுகுறித்து கவனம் காணப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பாகிஸ்தானிய ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இலங்கைத் தலைவர்களுடன் மேற்கொண்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகள் காரணமாக பொருளாதார உறவினை மேம்படுத்த முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# சன் சீ கப்பலில் சென்றவர்களில் பன்னிரண்டு பேர் கப்பல் ஊழியர்கள்

எம்.வீ. சன் சீ கப்பலில் கனடாவை சென்றடைந்த 492 பேரில் 12பேர் கப்பல் ஊழியர்கள் எனவும் அவர்கள் இந்த மனித கடத்தல் திட்டத்தை முழுமையாக்குவதற்கு பங்களிப்புச் செய்ததாகவும் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை தெரிவித்துள்ளது.

கப்பல் ஊழியர் ஒருவர் தொடர்பான விசாரணையின்போது இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊழியர் இலவச பயணத்திற்காக சமையல் வேலையையும் டீசல் இயந்திர அறையின் பணியையும் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊழியர் விசாரணையின்போது தமது பங்களிப்பை குறைத்துக்கூறுவதற்கு முற்பட்டதாகக் கூறப்படுகிறது. 3 மணித்தியால கடமை நேரத்தின்போது பெரும்பாலும் தான் அங்கு நின்று கொண்டிருந்ததாகவும் அவ்வப்போது கொள்கலன்களுக்கு எண்ணெய் ஊற்ற உதவியதாகவும் அவர் விசாரணையின் போது தெரிவித்தார்.

அதேவேளை ஊழியர்கள் குழுவில் அங்கம் வகித்தமையால் மாத்திரம் அவர் கிரிமினல் அமைப்புக்களினதோ கடத்தல் வலையமைப்புக்களினதோ அங்கத்தவராகிவிடமாட்டார் என அவரின் சட்டத்தரணி கூறியுள்ளார். மேற்படி குடியேற்றவாசிகளில் சுமார் 40பேரை அகற்றுவதற்கு கனேடிய எல்லைப் பாதுகாப்பு முகவரகம் முயற்சிக்கிறது. அவர்களில் பலர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்கள் என்ற அடிப்படையிலும் அல்லது போர்க்குற்றம் மற்றும் மனிதக் கடத்தல் உட்பட ஏனைய குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (2-4)


## Request for Expression of Interest (EoI)

## Upgrading of Office Building Electric wiring system:

UNICEF, Jaffna Field Office invites EoIs from qualified and experienced institutions to conduct an Upgrading of Office Building Electric wiring system.

Terms of References are;
General:
a. Replace Dangerous/substandard cabling.
b. Remove main fuse bypass and install a main fuse with correct rating.
c. Install RCCB breakers for earth leakage protection
d. Electrical Load balancing

Specific:
Provide own assessment and cost estimate to upgrade the office electric power supply system which should include the following;

- Replace the main service wire to 50mm 4 core
- Re-arrange current wiring with proper conducting
- Balance the three phases
- Install voltage meter and Ampere meters to monitor power fluctuations
- Install RCCD(trip switch) in the 3ph CEB distribution panels
- Replace the current circuit breakers to march a commercial work environment
- Repair the main incoming fuse (60ampere)
- Install 3 row enclosure for the generator room
- Install a metal enclosure for all electrical devices
- Disconnect the generator supply to UNDP
- Replace the 2.5mm wire from generator to the guest houses with a 6mm wire
- Separate earth link for office building and ICT room.

You are free to come and inspect the office building during office hours from 0900 – 1600 hrs from Monday to Friday.

Please provide your offer in sealed envelope by close of business (cob) 30 April 2011 and attached the company profile. Please include in the company profile

- Details of your facilities related to electrical wiring work.
- Number of technical staff and their capacity knowledge in the field of electrical engineering


Address :
UNICEF
125, Temple Road
Jaffna

(C-2900)

unite for children

unicef

# ஆனந்தத்தின் வழி



### ஆனந்தத்தின் பயன்

ஆனந்தமாக இருந்தாலும் சரி... துக்கமாக இருந்தாலும்சரி... நீங்கள் எப்படியிருந்தாலும் சிலரால் சுரண்டப்படக் கூடும். திறமை, சமூக நிலைமை அல்லது வேறு ஏதாவது ஒன்றின் காரணமாக ஒருவர் உங்களைச் சுரண்டக் கூடிய சாத்தியம் உள்ளது. நீங்கள் உலகின் எந்த மூலைக்குப் போனாலும் இது சாத்தியம். ஆனால் நீங்கள் ஆனந்தமாக இருந்தால், சுரண்டலால் உங்களுக்கு எந்தப் பாதிப்பும் இருக்காது.

இப்போது நூற்றுக்கணக்கான மக்கள் சம்பளம் எதையும் பெறாமல் ஆசிரமத்தில் தன்னார்வத்துடன் வேலை செய்து வருகிறார்கள். இது சரியான கண்ணோட்டத்தில் பார்த்தால்,உண்மையில் சுரண்டல் தான் இல்லையா? மக்கள் சந்தோசத்துடன் சுரண்டப்படுவதால் பிரச்சினை எதுவும் இல்லை. அவர்களது விருப்பத்திற்கு மாறாக மக்கள் சுரண்டப்பட்டால் அப்போதுதான் அது பிரச்சினை. மக்களே தாங்கள் சுரண்டப்பட்டதை விரும்பும் போது ,மற்றவர்களுக்கு அதில் என்ன பிரச்சினை? எதுவும் இல்லை.

தனக்கென்று எந்தத் தனிப்பட்ட விருப்பங்களும் வைத்துக் கொள்ளாமல் யார் ஒருவர் வாழ்கின்றாரோ, அவர் மட்டும்தான் முழுவிருப்பத்துடன் தான் சுரண்டப்படுவதை அனுமதிக்கின்றார். அவர் மிகவும் ஆனந்தமாக இருப்பதால், நீங்கள் அவரை எப்படி சுரண்டினாலும் அவர் அதை அனுமதிக்கின்றார். அவரிடம் எந்தக் கணக்குவழக்கும் கிடையாது.

உங்களிடமிருந்து எதையும் பெற வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாததால், அவர் உங்களை சுரண்ட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? சமுதாயத்தின் பார்வையில் அவர் சுரண்டுவதுபோல தோன்றினால் கூட, அந்த செயல்களுக்கு பின்னால் நிச்சயம் ஒரு நல்ல காரணம் இருக்கும். இல்லையென்றால் அவர் அதைச் செய்யப் போவதில்லை.

ஆக, இவை எல்லாம் எல்லோருக்கும் புரிகிறதோ இல்லையோ.. மக்கள் தாங்கள் சுரண்டப்படுவதை விரும்பி ஏற்கிறார்கள். ஏனென்றால் தனக்கென்று எந்தத் தேவையும் இல்லாத ஒருவர் இவ்வளவு வேலைகள் செய்யும் போது தாங்களும் அந்தப் பணியில் பங்கெடுத்துக் கொள்வதே சிறந்தது என்று மக்கள் நினைக்கிறார்கள். தனிப்பட்ட தேவைகள் உள்ள மனிதர் களுடன் இருப்பதைவிட, இவருடன் இருப்பது மேலானது என்று உணர் கிறார்கள். ஆக,சுரண்டல் ஆனந்தமாகவும் நடைபெறலாம்; துக்கமாகவும் நடைபெறலாம். ஆனால் துக்கமாக இருப்பதே மிகப்பெரிய சுரண்டல் தான்.

இப்போது நீங்கள் ஆனந்தமான நபராக இருந்தால்,எவரும் உங்களை உண்மையில் சுரண்டவே முடியாது. ஏனென்றால்,சுரண்டல் என்பதே உங்களது நலனுக்கு எதிராக எதையாவது செய்தல் என்பதாகும். நீங்கள் ஆனந்தமான நபராக இருக்கும்போது, உங்களது நலனுக்கு எதிராக எவரால் எதைச் செய்துவிடமுடியும்? உங்களை அவர்கள் கொல்ல முனைந்தால் கூட, நீங்கள் ஆனந்தமாகச் சாவீர்கள்.

உண்மையிலேயே ஆனந்தமாக இருக்கும் ஒருவரை எவராலும் சுரண்ட முடியாது. அவருக்கு என்ன கொடுமை செய்தாலும்,அதைச் செய்தவருக்குத் தான் நஷ்டமே தவிர, அவருக்கு அல்ல. அவரை நீங்கள் கொன்றால் கூட, ஒரு ஆனந்தமான மனிதரை நீங்கள் தான் இழக்கிறீர்கள். அவருக்கு என்ன நஷ்டம்? அவர் இழப்பது எதையுமல்ல; அவர் இழப்பதெல்லாம் அவருக்கு அர்த்தமற்றதாக இருந்த ஓர் உடலை மட்டுமே. குறைந்தபட்சமாக உடலின் வலி களும் போராட்டங்களும் அவருக்கு ஒழிந்தன.

எனவே, நீங்கள் உண்மையிலேயே ஒரு ஆனந்தமான நபராக இருந்தால், எந்தச் சுரண்டலும் உங்களை எப்போதும் சீண்டாது. துக்கமான மனிதன் மட்டுமே தன்னை யாராவது சுரண்டி விடுவார்களோ என தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பான். ஒவ் வொரு சிறிய செயலுக்குப் பின்னாலும் ஏதோ ஒரு சுரண்டல் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். இதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்.

மக்களுக்குத் துக்கம் அதிகமாக அதிகமாக, தங்களை யாராவது சுரண்டுவார்களோ எனத் தொடர்ந்து பயந்து கொண்டிருக்கிறார்கள். யாராவது தங்களை பயன்படுத்திக் கொள்வார்களோ என்கிற பயம் அவர்களிடம் எப்போதும் இருக்கிறது. பெரும்பாலானவர்களிடம் பயன்படுத்திக் கொள்வதற்கு என்ன இருக்கிறது?

அவர்கள் தங்களைத் தாங்களே பயனற்றவர்களாக ஆக்கிக் கொண்டு விட்டார்கள். நீங்கள் துக்கமாக இருந்தால், சாதகமான நிலையில் இருக்கிறீர்களா அல்லது சாதகமற்ற நிலையில் இருக்கிறீர்களா? நீங்களே உங்களை சாதகமற்ற நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டீர்கள். இது சுரண்டல் இல்லையா?

நீங்கள் துக்கமாக இருந்தால் எவரும் உங்களைச் சுரண்டத் தேவை யில்லை, எல்லாமே உங்களுக்கு சுரண்டல்தான். ஆனால் நீங்கள் ஆனந்தமாக இருந்தால், எந்தச் சுரண்டலும் உங்களை எப்போதும் தீண்டாது. அவை என்ன செய்தாலும் கவலையில்லை. மற்றவர்கள் உங்களுக்கு ஏதாவது முட்டாள் தனமாகச் செய்தாலும் அவர்களது வாழ்க்கையைத் தான் அவர்கள் அர்த்தமற்றதாக்கிக் கொள்கிறார்களே தவிர உங்களுடையதல்ல!.

## ஆன்மீகம் 20

உண்மையிலேயே ஆனந்தமாக உள்ள ஒருவரது வாழ்க்கையை அவர்களால் அர்த்தமற்றதாக்க முடியாது. ஒரு துக்ககரமான மனிதனின் வாழ்க்கையை வேண்டுமானால் அவர்களால் அர்த்தமற்றதாக்க முடியும்.

ஆனந்தமான ஒருவரின் வாழ்க்கையை அர்த்தமற்றதாக ஆக்கவே முடியாது; ஏனென்றால், அவர்கள் வாழ்க்கையில் எந்த அர்த்தத்தையும் தேடவில்லை. அவர்கள் வாழ்வே அழகானது தான். தனது வாழ்க்கையில் எந்த அர்த்தத்தையும் அவர் எதிர்நோக்கவில்லை எனும் போது அவரது வாழ்க்கையை மற்றவர்களால் எப்படி அர்த்தமற்றதாக ஆக்க முடியும்? எப்படி சுரண்ட முடியும்?

உங்களால் ஆனந்தத்தைச் சுரண்ட முடியாது; துக்கத்தை மட்டுமே சுரண்ட முடியும். சுரண்டல் சாத்தியமாவதற் குக் காரணமே அதிக எண்ணிக்கை யிலான மக்கள் துக்கத்தி லிருப்பதுதான்; இல்லாவிட்டால் இங்கு சுரண்டலே இருக்காது.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஈழத்து தமிழ்ப் பெண்களின் கூட்டுக் கவித்தொகைகள்

## சொல்லாத சேதிகள் முதல் ஒலிக்காத இளவேனில் வரை ஓர் ஆய்வு 03

பேசினாலும் அது 100% உண்மையானது அல்ல. ஒலிக்காத இளவேனில் (2009) தொகுப்பாளர்கள், தாம் ஒலிப்பதை மறுக்கின்ற சூழலின் மீதும் சுய மரியாதையின்றி அவமதிக்கப்படும் ஆண்-பெண் உறவுச் சிக்கல்களின் மீதும் பேச்சை ஒடுக்கும் குடும்ப நிறுவனங்களின் மீதும் சற்றேனும் இவை தம் வசனஙக்களைப் பதிவு செய்திருக்கின்றன. இறுக்கமான சமூகக் கட்டமைப்பில் இத்தகைய பகிர்வுகள் மாற்றத்திற்கான சிறுசிறு சலனங்களே எனலாம் என்பதில் இருந்து நாம் அறியலாம்.

1986களில் சொல்லாத சேதிகள் மூலம் வீறெய்தத் தொடங்கிய கவிதை மூலமான பெண்ணிய விழிப்புணர்வு, சிந்தனைத் தடங்கள் 1992இல் புலம் பெயர் சூழலில் இருந்து வெளிவந்த மறையாத மறுபாதிமூலம் இன்னும் அகலித்துக்கொள்ளத் தொடங்கியது. உயிர்வெளி என்ற தனித்த பெண்களின் காதற் கவிதைகள் புதிய வெளிச் சத்தைப் பாய்ச்சின. குடத்து விளக்கன்ன கொம்பன்னார் கரம் புறப்படா என்று முத்தொள்ளாயிரம் கூறியிருந்தாலும் சங்ககால பெண்கள் சிலரின் காதல் கவிதைகள், ஆண்டாள் மரபில் தனித்த அடையாளத்தை இத்தொகுதி உண்டாக்கியமை முக்கியமானது. ஈழப் பெண்களின் கவிதையான எழுதாத உன் கவிதை பேசும் போது அடுப்படிக்குள் இருந்து பணிவிடை செய்த பெண்ணைப் பற்றியும் பேசப்படத் தொடங்கிற்று. இசை பிழியப் பட்ட வீணை மூலம் கூடைக் கொழுந்தின் சுமை போல் அவர்களை அழுத்திய பொருளாதார அரசியல், குடும்பச் சுமைகள் பற்றிப் பேசினர். பெயல் மணக்கும் பொழுது 2007 வரை ஈழத்தில் எழுதிய பெண்களின்

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

கவிதைகளை பெண்ணெழுச்சி, காதல், காமம், போர் என்று பல தளங்களில் வெளிப்படுத்தியது. ஒலிக்காத இளவேனில் தேசம், புலம்பெயர்வு, பெண்ணின் வாழ்வியல் என்ற தளங்களில் பெண்ணின் உணர்வாயும் குரலாயும் ஒலித்தது.

இன்று 1986களில் இருந்த பெண்களுக்கான கலை இலக்கிய நெறியை உருவாக்குவது என்பது பெண்மொழியை உருவாக்கல் என்ற தளத்துக்குள் இலங்கையை மையமாகக் கொண்டி ருந்த பெண்ணியச் சிந்தனைதான் இன்று சர்வதேசம் தழுவிய ஒன்றாகவும் மாற வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது.

இதனை ஒலிக்காத இளவேனில் தொகுப்பாசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். வடஅமெரிக்காவைக் களமாகக் கொண்டிருக்கிற இத்தொகுதியில் அமெரிக்காவில் 2001 செப்ரெம்பர் உலக வர்த்தக மையம் தாக்கப் பட்டதற்குப் பின்பான அரசியலில், ஓர் கால கட்டம் மறைமுகமாக வேனும் பேசப்பட்டிருக்கவேண்டும். ஈழத்தில் மட்டுமல்ல உலகெங்கிலும் அதன் விளைவுகள் பற்றி இப்பெண்களுடைய எழுத்திலும் பதியப்பட்டிருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாயிருந்தது. அதுவே தமிழ்க் கவிதைச் சூழலுக்கான வளர்முகமாகத் தோன்றிற்று.

இதையே பெயல் மணக்கும் பொழுது தொகுதிக்கு சேரன் காலச்சுவடு இதழில் எழுதிய மதிப்புரையில் வேறொரு விதத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

"பெண்மொழியைப் பற்றி மட்டுமே பேசுவதை விடுத்து பெண்மொழி, பெண்ணிய அனுபவங்கள் என்கிற சாளரத்துக்கூடாக விரியும் புதிய வடிவங்கள், புதிய உறவு நிலைகள், புதிய பண்பாட்டுக் கோலங்கள், புதிய கலாசார இலக்கணங்கள், புதிய பாலின/ பாலியல்பு உறவுகள் என்பவற்றைப் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது"

எனவே 1996-2009 வரையான காலப்பகுதியில் வெளிவந்த கூட்டுக் கவிதைத் தொகுதிகள் வழியே பெண்ணிய எழுச்சியை, தடங்களை, விழிப்புணர்வை, எதிர்ப்பை, விடுதலை அவாவை, புலம்பெயர்வுச் சூழலை, அங்குள்ள புதிய விலங்குகளை, பெண்மொழிக்கான பிரக்ஞைகளை, சர்வதேசத்தைத் தொட்டுத் தழுவமுனையும் பெண்ணெழுத்தின் தரிசனத்தை தீர்க்கத்தை கிட்டத்தட்ட 25 வருடகாலத்தின் ஊடாக ஒரு வரலாற்றைப் போல் தரிசிக்க முயல்வோம்.

*(தொடரும்)*

**த.அஜந்தகுமார்,**
முன்னாள் உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

# மக்கள் வங்கி 2010-ம் ஆண்டு

# பெறுபேறுகளில் சாதனை படைப்பு

## வரி மூலம் அரசு பெற்றது ரூ.9.9 பில்லியன்



மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ

49 வருடங்களாக இலங்கை மக்களுக்கு சேவை வழங்கி வரும் மக்கள் வங்கி 2010-ம் ஆண்டிலும் வியக்கத்தக்க செயலாற்றலைக் காட்டியுள்ளது.

கணக்காய்வு செய்யப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்கான நிதியறிக்கையின்படி, அவ்வாண்டில் வரிகளுக்கு முந்திய இலாபமாக 8.8 பில்லியன் ரூபாயையும்(44 சதவீத அதிகரிப்பு),இக் குழுமத்தின் வரிகளுக்கு முன்பான இலாபமாக 11.4 பில்லியன் ரூபாயையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

இக்குழும லாபமானது 2010-ம் ஆண்டில் வங்கித்துறையிலான அதி கூடிய இலாபமாகும்.

2010-ம் ஆண்டிற்கான மொத்த வட்டி வருமானம் 9.3%இனாலும், வட்டிச் செலவு 20.2% இனாலும் குறைவடைந்துள்ளது.

மத்திய வங்கியின் வட்டி வீதங்கள் தொடர்பான கொள்கைக்கு இணங்க வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கான காரணமாகும்.

வரிக்குப் பின்பான இலாபம் 2009-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 3.3 பில்லியனில் இருந்து 5.2 பில்லியன் ரூபாயாக 56.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 2009-ம்ஆண்டிற்கானரூ.476பில்லியன்வரை15%ஆக அதிகரித்துள்ளது.

மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணம் ரூ.299 பில்லியனில் இருந்து ரூ.372 பில்லியன் வரை 24% ஆக அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் வர்த்தக கடன் மற்றும் அடகு முற்பணம் போன்றவையாகும்.

நகை அடகுச்சேவையின் முன்னோடியாகவும் வங்கி விளங்குகிறது. நகை அடகுச் சேவை என்பது விவசாயம், மீன்படி மற்றும் நுண், சிறு/ நடுத்தரத் தொழில் முயற்சியாளர் போன்றவர்களின் நிதிச் சுற்றோட்டத்தில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது.



மக்கள் வங்கியின் பதில் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் பொது முகாமையாளர் என்.வசந்தகுமார்

செயலிழந்த கடன்(NPL) 1.3 பில்லியன் ரூபாயால் குறைவடைந்து 2010இல் ரூ.18.7 பில்லியனாக மாறியுள்ளது. வங்கியின் செயலிழந்த கடன் வீதமானது 2009இல் 6.7%ஆக காணப்பட்டதுடன் 2010 இல் 5%ஆக குறைந்துள்ளது.

வங்கியின் மூலதனம் 17.8 பில்லியனிலிருந்து 20.8 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

மக்கள் வங்கியானது 29% வரி அதிகரிப்பின் காரணமாக 7.9வீதத்திலிருந்து 9.9 பில்லியன் ரூபாய் வரை வரியின் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுகிறது.

வாடிக்கையாளர் கணக்குகள் 13 மில்லியனைநெருங்கியுள்ளஅதேவேளை, வங்கியின் 679 வங்கிக் கிளைகள், 549 சேவை நிலையங்கள், 330 தன்னியக்க இயந்திரங்கள் 2011 ஜூலை மாதத்திற்குள் ஒன்றுடன் ஒன்று கூட்டிணைக்கப்படவுள்ளன.




# கொமர்ஷல் வங்கியால்

# உலக வங்கி உதவியுடன் சிறிய

# நடுத்தர முயற்சியாளர்களுக்கு கடன்

இலங்கை கொமர்ஷல்வங்கி, உலக வங்கியின் நிதி உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான அபிவிருத்தி k (SMEDEF) கடன்களை வழங்குகின்றது.சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (SMES) தங்களை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இந்தக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இது தொடர்பாக கொமர்ஷல் வங்கி அரசுடன் உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டது. இதன் மூலம் இத்திட்டதிற்கு கை கொடுக்க முன்வந்துள்ள 8 வங்கிகளில் முதலாவது நிறுவனமாக கொமர்ஷல் வங்கி திகழ்கிறது.

3 அரச வங்கிகளும்,5 தனியார் வங்கிகளும் இத்திட்டத்தில் பங்கேற்கவுள்ளன.

இந்த கடன் வழங்கலுக்கான விண்ணப்பங்களை கோரி அவற்றை பரிசீலிக்கும் நடவடிக்கைகளை கொமர்ஷல் வங்கி ஏற்கெனவே ஆரம்பித்துள்ளது.

உற்பத்தி துறையிலும் சேவைத் துறையிலும் பணியாற்றும் வருடாந்தம் ரூ. 300 மில்லியனும் குறைவான வருமானம் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி கடன் வசதிகளின் கீழ் இந்தக் கடனைப் பெற விண்ணப்பிக்கும் தகுதியுடையவர்களாவர். மத்திய வங்கியின் சராசரி நிறைவேற்றப்பட்ட வைப்பு வீதத்திற்கு இசைவான ஒரு மிதக்கும் வட்டி வீதம் இதற்குப் பிரயோகிக்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது.

வர்த்தக வாகனங்கள் மற்றும் பொறிகள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய நிரந்தர சொத்துக்களை கொள்வனவு செய்தல், நிரந்தர தொழில்படு மூலதன தேவைகள், தொழிற்சாலைக் கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற தேவைகளுக்காக இத்திட்டத்தின் கீழ் கடன் பெறமுடியும். இத்திட்டத்தின் கீழ் தனி நபர் ஒருவர் ஆகக்கூடியது 60 மில்லியன் ரூபாயை கடனாகப் பெறமுடியும்.

பிரத்தியேகமாக தொழிற்படு மூலதனத் தேவைக்காக பெற்றுக் கொள்ளும்கடன்3வருடமும்,ஏனைய தேவைகளுக்காக பெற்றுக் கொள்ளும் கடனை மீளச் செலுத்துவதற்கான காலம் 10 வருடங்களுமாகும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7377.22 | 7413.87 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7024.63 | 7021.22 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 8,201.37 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** சிங்கலங்கா (2122.10), ஹலமசு (2430.00), ஈஸ்டேன் மேர்ஷன்ட் (901.00), யூனியன் கெமிக்கல்(977.00), ஹரிச்சந்திர (1500.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** மல்வத்தை (10.80),மத்வத்தை (X) (9.70), நஷ.டெவலப்மன்ட்.பாங்(166.20), சிங்கர் சிறிலங்கா (110.20), எச்.என்.பி.(250.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## கச்சா எண்ணெய் விலை

## அதிரடியாக உயர்வு

உலக அளவில் கச்சா எண்ணெய் விலை இன்று எப்போதும் இல்லாத அளவிற்கு அதிரடியாக அதிகரித்துள்ளது. அரபு நாடுகளில் தொடர்ச்சியாக நிலவிவரும் பதற்ற நிலை, நைஜீரியா தேர்தல் ஆகியன கச்சா எண்ணெய் விலையின் அதிரடி உயர்விற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நைஜீரியா ஆபிரிக்காவின் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடாகும். நியூயோர்க்கின் மே மாத விநியோக கணக்கின்படி கச்சா எண்ணெய் விலை 110.85 டொலர்களாக உள்ளது.

# செய்தித் துளிகள்...

## மட்டக்களப்பில்

## வர்த்தக கண்காட்சி

யுனிடோவின் (UNIDO) அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில்சம்மேளனம் ஏற்பாடுசெய்துள்ள வர்த்தககண்காட்சி எதிர்வரும் ஜூன் 3,4,5 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியில்உள்ளூர், தேசிய, சர்வதேச முதலீட்டாளர்கள் மற்றும் 150இற்கும் மேற்பட்ட கம்பனிகளின் காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதில் பங்குபற்ற ஆர்வமுடையோர் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சமேளனம்,தாமரைக் கேணி வீதி, மட்டக்களப்பு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என மட்டு. மாவட்ட வர்த்தக கைத்தொழில் சமேளனத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியாவுக்கான

## விமான சேவை அதிகரிப்பு

இலங்கை மற்றும் பிரித்தானிய நாடுகளுக்கிடையிலான விமான சேவையை அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது . இந்த உடன்படிக்கையின் மூலம் இரு நாடுகளுக்கிடையிலும் வாரமொன்றிற்கு 14 தொடக்கம் 21விமான சேவைகள் நடத்தப்படும் எனவும் வசந்த காலப் பகுதியில் இவ் விமான சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலத்திரனியல்,வாகன

## பொருட்களின் விலை

## அதிகரிக்கலாம்

ஜப்பானில் கடந்த 11-ம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தம் காரணமாக இலத்திரனியல், வாகன பொருட்களின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து உலகம் முழுவதும்ஸ்மாட்போன்கள், வீடியோ கமராக்கள் போன்றவற்றின் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பல்வேறு இலத்திரனியல் பொருட்களையும்,வாகனங்களையும்தயாரித்து உலகம் முழுவதும் ஜப்பான் விற்பனை செய்து வருகிறது. மேற்கண்ட நிறுவனங்கள் மே மாதத்தில் மீண்டும் செயற்படத் தொடங்கும். முழு உற்பத்தியை அடைய ஆண்டு இறுதியாகிவிடும் என்பதால் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்து அதன் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.56 | 111.30 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 178.47 | 182.75 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 156.35 | 160.75 |
| சுவிஸ் பிராங் | 118.73 | 122.96 |
| கனேடிய டொலர் | 113.51 | 117.32 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.87 | 117.70 |
| சிங்கப்பூர் டொலர் | 86.36 | 88.92 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.31 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.50 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.05 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தொழிற்துறை,நிர்வாகக் கல்விக்கு

# தோனியின் நிர்வாகத் திறமை ஒரு பாடம்



இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனியின் நிர்வாகத் திறமை, தொழிற்துறை, நிர்வாக கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்துத் துறையினருக்கும் சிறந்த பாடமாக அமைந்துள்ளதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்திய அணி 28 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் சம்பியன் கிண்ணம் வென்றிருக்கிறது. இந்த வெற்றிக்கு அணித்தலைவர் தோனியின் சிறந்த நிர்வாகத் திறமையே முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. சிறந்த அணி நிர்வாகத் திறமையும், முடிபு எடுக்கும் திறமையும் கிரிக்கெட் வீரர்களுக்கு மட்டுமல்லாமல், தொழிற்துறையினருக்கும் சிறந்த பாடமாக அமையும்என நிபுணர்கள் கூறியுள்ளனர். தோனி கப்டன் பொறுப்பை ஏற்றது முதலே, இலக்கு நிர்ணயித்து அதை அடைவதில் உறுதியாக இருந்தார்.இதனாலேயே உலகக்கோப்பையை வெல்ல முடிந்தது என தோதரெஜ் குழுமத் தலைவரும் இந்தியன் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் தலைவருமான ஆதி கோதிராஜ் தெரிவித்துள்ளார்.

இக்கட்டான நிலைமையை பதற்றமில்லாமல் எதிர்கொள்ளும் விடயத்தில் இவரது முடிபு எடுக்கும் திறன் அனைத்து துறையினருக்கும் பாடமாக விளங்குகிறது என ஆர்பிஜி குழுமத் தலைவர் ஹர்ஷ் கோயங்கா தெரிவித்தார்.

# பிரிவினைவாதத்துக்கு அமெரிக்கா ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது

## றொபேர்ட் ஓ பிளேக் தெரிவிப்பு

நீண்டகாலமாக தாம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் நபர்களையும் சந்தித்து வருவதாகவும் பிரிவினைவாதத்திற்கு அமெரிக்கா ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளெக் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தைத் தூண்டும் அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுடன் தாம் சந்திப்புகளை மேற்கொண்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குளோபல் தமிழ் போரம் அமைப்பு உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பு தவறாக அர்த்தப்பட்டுள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நீண்டகாலமாக தாம் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களையும் நபர்களையும் சந்தித்து வருவதாக குறிப் பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் கொள்கைகளை தெளிவுபடுத்தும் நோக்கில் இவ்வாறான சந்திப்புக்கள் நடத்தப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கியமானதும் அமைதியானதுமான இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை தாம் வலியுறுத்தியதாக தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஐரோப்பியாவிற்கு விஜயம் செய்துள்ள காரணத்தால் தமது விஜயத்தை காலம் தாழ்த்துமாறு இலங்கை அரசாங்கம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# கர வருடப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கர வருடப்பிறப்புவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

இதில் காலை 5.30 மணிக்கு உஷக்கால பூசையும் 6 மணிக்கு ஸ்நபனமும் 7 மணிக்கு காலை சந்திப் பூசையும் 8 மணிக்கு துர்க்கா புஷ்கரணியில் சங்கிராந்தி தீர்த்த உற்சவமும் தொடர்ந்து 10 மணிக்கு கலச சங்காபிஷேகமும் 11 மணிக்கு பூசையும் நடை பெறும்.

பிற்பகல் ஒரு மணிக்கு வருடப்பிறப்பு விசேட பூசையும் மாலை 4 மணிக்கு சாயரட்சைப் பூசையும் இரவு 7 மணிக்கு அர்த்த சாமப்பூசையும் இடம்பெறும். (2)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் தொடர்பாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் தொடர்பான விபரங்கள் இல்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுமத்தியுள்ள குற்றசாட்டினை இராணுவத்தரப்பு முற்றாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபயமெதவெல கருத்துத் தெரிவிக்கையில்,

இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட அனைத்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தொடர்பான தகவல்களை அவர்களுடைய உறவினர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.


இந்நிலையில் இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை என்றார்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் ஆசியப் பிராந்திய பிரதிநிதி பிறாட் அடம்ஸ் விடுத்துள்ள அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேஜர் ஜெனரல் உப்யமெதவெல இவ்வாறு தெரிவித்தார். (2-4)

# மரண அறிவித்தல்கள்

## கலைஞானச்சுடர் டானியல் தேவமதுரம்

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், கல்வித்திணைக்களம் முன்னாள் உபசெயலாளர், நல்லூர் பிரதேச செயலக கலாசாரப்பேரவை)



அரியாலை மேற்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.டானியல் தேவமதுரம் அவர்கள் நேற்று 09.04.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான டானியல்-இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், சுகிர் நாகேந்திரா, சுதன் சுகேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, மோ. தேவமணி, ஜெ.கோகிலமணி, டா.வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சு.மோசஸ், பொ. ஜெகானந்தராஜா, வ.றீற்றா கமலவேணி மற்றும் எம்.எஸ். பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும், பொ.சந்திராதேவியின் மனைவி வழிச் சகோதரரும், பொ.சந்திரகுமார், பொ.ராஜ்குமார், ம.நந்தினி, மோ.ஷாந்தன் சத்தியகீர்த்தி, மோ.சேந்தன் சத்தியதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வ.ஜோய் வாகினியின் பெரியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.7, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 4745573, 0779810877

தகவல்:
குடும்பத்தினர்.

(4444)

# ஜோர்தானில் ஆதரவற்ற இலங்கையர்கள் வெளியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும்

## மனித உரிமைகள் காப்பகம் வேண்டுகோள்

ஜோர்தானில் நிராதரவாக உள்ள 26 இலங்கையர்களையும் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

வீட்டுப் பணியார்களாக பணியாற்றி வந்த இவர்கள் வேலை கொள்வோரினால் துர்ஷிக்கப்பட்ட நிலையில் அங்கு தொடர்ந்தும் இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களிடம் அங்கிருந்து வெளியேறுவதற்குரிய நிதி வசதி இல்லாமை காரணமாக ஜோர்தான் சட்டத்திற்கு அமைய அபராதம் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் அபராதத்தை செலுத்தவோ வானூர்தி பயண சீட்டிற்கான நிதியினை வழங்கவோ முடியாத நிலையில் இருப்பதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த இலங்கையர்களின் நுழைவு அனுமதி காலாவதியான நிலையில் அங்கு தங்கியுள்ளமைக்கு ஜோர்தான் சட்டத்திற்கு அமைய அபராதம் செலுத்தப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி இலங்கை பணியாளர்கள் ஜோர்தானுக்கான இலங்கை தூதுவராலயத்தில் அடைக்கலம் கோரிய நிலையில் அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜோர்தானை விட்டு வெளியேறாத நிலையில் உள்ள இலங்கையர்கள் அங்கு இரண்டு வருடம் முதல் 11 வருடங்கள் வரை பணியாற்றியவர்கள் எனவும்மனித உரிமைகள் கண்காணிப்பக அமைப்பு தெரிவித்துள்ளது. (2-4)

## திருமதி சுந்தரம் இராமலிங்கம்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் இராமலிங்கம் 08.04.2011 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான நாகலிங்கம் அபிராமி தம்பதியரின் மகளும், காலம்சென்றவர்களான அனலைதீவு ஆறுமுகம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலம்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான பூமணி, நவரத்தினம், நடராசா, இரத்தினம், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரராணி (சரவணை), அமிர்தலிங்கம் (வவுனியா), தனிநாயகம் (மானிப்பாய்), சாரதாம்பாள் (பின்லாந்து), செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், காலம்சென்ற மகாலிங்கம் (சரவணை) மற்றும் வையேந் திமாலா (வவுனியா), வில்வராணி (மானிப்பாய்), காலம்சென்ற அங்கமுத்து (பின்லாந்து) மற்றும் பகீரதி (மானிப்பாய்) ஆகியோரின் மாமியும், மகேந்திரன் (கவிதா), மகேந்திரராணி (சத்தியசீலன்), மனோகரன் (மாலினி), மனோகரி (கிருபாகரன்), காண்டீபன், தர்சிகா (குலசேகரன்), சஞ்ஜிவன், சோபிதா, வர்னஜீவன், குமுதினி (காண்டீபன்), காலம்சென்ற செந்தூரன் மற்றும் கயனி, கயேந்தினி, கயந்தன், இந்துமதி (பாலவிஜித்), மணிசேகரன், பானுமதி (தவலோசன்), ஸ்ரீமதி, யுதாகரன், திலக்சி, திலக்சன், நிதர்சன், இலக்சன், யுதர்சன் ஆகியோரின் பேர்த்தியும், அனுசா, அனுசன், கோபிசா, கிருசாந், திவ்வியா, தீபிகா, பகீரா, அபிராம், டனுஜா ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலி தெற்கு மானிப்பாய் (செல்வநாயகம் இல்லத்தில் திங்கட்கிழமை 11.04.2011 நாளை பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செக்காலை லேன்,
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
செல்வநாயகம் குடும்பத்தினர்.
தொ.பே: 077 4316313,

(4442)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் ஆண்டவன் அடியில்

23.02.1927 11.03.2011

## அமரர் செல்லர் பொன்னையா

(4425)

*கடந்த 11.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் திரு. செல்லர் பொன்னையா*

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், நினைவஞ்சலி நிகழ்வும் (இன்று) 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கொய்யாத்தோட்டம்,*
*இருபாலை, கோப்பாய்.*

குடும்பத்தினர்.

# பிரான்ஸில் குடியேறுபவர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும்

## அந்நாட்டு உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

பிரான்ஸ் நாட்டிற்கு பணி, குடும்பத்துடன் இணைதல் மற்றும் இதர விசாக்கள் தொடர்பாக வரும் குடியேற்ற நபர்கள் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென உள்துறை அமைச்சர் கிளாடே குயன்ட் அரசிடம் தெரிவித்தார். கன்சர்வேட்டிவ் கட்சியின் பிகாரோ இதழில் அமைச்சர் கிளாமே குயன்ட் கூறுகையில்,

பணி, குடியேற்ற விசா எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என கூறியுள்ளேன். அதேபோன்று குடும்பத்துடன் ஒன்று சேர்வதற்கு விசா எண்ணிக்கையையும் குறைக்க விரும்புகிறோம் என்றார்.

ஒவ்வொரு வருடமும் பணி விசாவில் 20 ஆயிரம் பேரும் குடும்பக் காரணங்களுக்காக 15 ஆயிரம் பேரும் விசா பெற்று பிரான்ஸ் வருகிறார்கள் என உள்துறை அமைச்சகம் கூறுகிறது. பிரான்ஸில் குடியேற்றம் சார்ந்த நிகழ்வுகளுக்கு உள்துறையே பொறுப்பு வகிக்கிறது.

உள்துறை அமைச்சர் கிளாடே குயன்டின் இந்த அறிக்கைக்கு சோசலிஸ்ட் கட்சியும் எஸ்.ஓ.எஸ். அமைப்பும் ஏற்கவே கண்டனம் தெரிவித்துள்ளன. குடும்பத்துடன் மீண்டும் ஒன்றுசேர்வதற்கான விசாக்களின் எண்ணிக்கையை குறைப்பது அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கை என சோசலிஸ்ட் எம்.பி.சாண்ட்ரின் மாஸே டியர் குற்றம் சாட்டினார்.

பிரான்ஸில் வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுகின்றது. அதனை திசை திருப்புவதற்காகவே குடியேற்ற நபர்கள் எண்ணிக்கையை குறைப்பதாக அரசு நாடகமாடுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (4)

# ஜேர்மனியில் சூறைக்காற்றால் பயங்கர விபத்து சம்பவங்கள்

கண்ணை மறைக்கும் பயங்கர புழுதிக் காற்று காரணமாக வடகிழக்கு ஜேர்மனியில் பெரும் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயமடைந்தனர்.

வடகிழக்கு ஜேர்மனியின் கடலோர நகரமான ரோஸ்டாக் பகுதியில் ஏற்பட்ட திடீர் புழுதிக் காற்று வாகன சாரதிகளின் கண்ணை மறைத்தது. அதனால் வடக்கு ஜேர்மனியின் நெடுஞ் சாலையில் பெரும் விபுத்து ஏற்பட்டது

டிரக்குகளும் கார்களும் எதிர்திசையில் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 17 கார்கள் மற்றும் 3 டிரக்குகள் தீ பிடித்து எரிந்தன. விபத்தில் 40-50 வாகனங்கள் சிக்கின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் அபாயகரமான பொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனமும் சிக்கிக் கொண்டது.

பல வாகனங்களின் தொடர் விபத்தில் 8 பேர் உயிர் இழந்தனர். 60 பேர் காயம் அடைந்தனர். படுகாயமடைந்த 27 பேர் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பல சாரதிகள் தங்களது வாகனங்களுக்குள்ளேயே சிக்கிக் கொண்டனர். இந்த விபத்து குறித்து பொலிஸ் பெண் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

மெக்லன் பார்க் பகுதியில் ஏற்பட்ட பயங்கர விபத்து இதுவாகும் என்றார். நிகழ்விடத்திற்கு தீயணைப்பு துறையினர், அவசர மீட்புக் குழுவினர் மற்றும் பொலிஸார் விரைந்தனர்.

சூறைக்காற்றால் ஏற்பட்ட மோசமான வெளிச்சத்தால் ஹெலிகொப்டர்கள் நிகழ்விடத்தில் தரை இறங்க முடியவில்லை. (4)

# சிரியாவிலும் மக்கள் போராட்டம்; கண்டிக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி

சிரியாவில் 11 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத்துக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் முதல் பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இதை தொடர்ந்து அரசியல் சட்டத்தை மறு சீரமைப்பு செய்வதாக அவர் அறிவித்துள்ளார். ஆனால், அதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே, அவர்களின் போராட்டத்தை ஒடுக்க ஜனாதிபதி ஆசாத் இராணுவத்தையும் பொலிஸையும் பயன்படுத்தி வருகிறார். எனவே, போராட்டம் கலவரமாக மாறியுள்ளது.

இதை தொடர்ந்து போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினரும், பொலிஸாரும் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் 20 பேர் பலியானார்கள். அவர்களில் பெரும் பாலானவர்கள் டாரா நகரில் தான் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

துப்பாக்கி சூட்டில் 100 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 3 வாரத்தில் மட்டும் போராட்டத்தில் ஈடுபட்ட 170 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சிரிய அரசை வலியுறுத்தியுள்ளதுடன் இச்சம்பவத்துக்கு கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (4)




# இலஞ்சம் வாங்கிய சீன அதிகாரிக்கு ஆயுள் தண்டனை

இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக சீனாவில் அரச அதிகாரிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

நிங்சியா ஹுயி எனும் மாகாணத்தைச் சேர்ந்தவர் லீ டாங்டாங் என்பவர். இவர் கம்யூனிஸ் கட்சியிலும் உள்ளூர் ஆட்சியிலும் பல உயர் பதவிகளை வகித்தவர்.

பாவோஜி நகரில் கட்சி துணை தலைவர் பதவி வகித்ததோடு துணைமேயராகவும் இருந்துள்ளார். சியான்யாங் நகரில் கட்சித் தலைவராகவும் ஷான்சி மாகாணத்தின் துணை ஆளுநராகவும் 1998 முதல் 2009 வரை தொடர்ந்து முக்கிய பதவிகள் வகித்து வந்தார்.

இந்தக் காலகட்டத்தில் அவர் பதவியைப் பயன்படுத்தி ஏறத்தாழ 11.7 இலட்சம் மில்லியன் டொலர் இல்ஞ்சம் வாங்கினார் எனக் கூறப்பட்டது. அவர் உயர்பதவி வகித்த கால அளவில் ஆட்டோ தொழிலகங்கள், கட்டுமான நிறவனங்கள் போன்ற நிறுவனங்களிடமிருந்து பெரும் தொகைகளை இலஞ்சமாகப் பெற்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

அதேபோல பல கட்டுமான நிறுவனங்களுக்கு அரசுப் பணி ஒப்பந்தங்கள் வாங்கித் தருவதாகக கூறி பல தனிநபர்களிடம் இலஞ்சம் வாங்கியுள்ளார். வேலை வாங்கித் தருவதாகவும் பலரிடம் இவர் இலஞ்சமாகப் பணம் பெற்றுள்ளார்.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள சொங்கிங் நகரில் இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது லீ டாங்டாங் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். வழக்கின் முடிவில் நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மேலும் அவருடைய சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அவர் நீக்கம் செய்யப்பட்டார். வழக்கின் ஆரம்பத்திலேயே அவர் குற்றத்தைக் ஒப்புக் கொண்டு இலஞ்சமாகப் பெற்ற பணத்தின் ஒரு பகுதியை அவர் ஒப்படைத்ததால் அவருக்கு ஆயுள் தண்டனை எனும் குறைவான தண்டனையே வழங்கப்பட்டதாக நீதிபதி தெரிவித்தார். (4)

# லிபிய போரால் அமெரிக்காவுக்கு 75 மில்லியன் டொலர் செலவு

லிபய போரால் இதுவரை 75 மில்லியன் டொலர் செலவாகியுள்ளதென அமெரிக்க விமானப்படை தகவல் தெரிவித்துள்ளது. சொந்த நாட்டு மக்கள் மீது இராணுவ தாக்குதல் நடத்திய லிபியா மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அனுமதியளித்தது. இதையடுத்து நேட்டோ தலைமையிலான கூட்டுப் படையினர் லிபியா மீது கடந்த மாதம் 19 ஆம் திகதி தாக்குதலைத் தொடங்கினர்.

இது குறித்து வோஷிங்டனில் நேற்று முன்தினம் பேட்டியளித்த அமெரிக்க விமானப்படை செயலாளர் டோன்லே கூறியதாவது,

லிபிய போரால் அமெரிக்க இராணுவத்துக்கு ரூ 2 ஆயிரத்து 300 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டது. லிபியா மீது தாக்குதல் நடத்த அமெரிக்க விமானப்படை 50 போர் விமானங்களையும் அவற்றுக்கு எரிபொருள் நிரப்ப மற்றும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள 39 இதர விமானங்களையும் பயன்படுத்தியது.

அமெரிக்க விமானப்படையின் தாக்குதல் அண்மையில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு அமெரிக்க விமானப்படைக்கு இதுவரை 75 மில்லியன் டொலர் (ரூ.345 கோடி) செலவாகியுள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 4 மில்லியன் டொலர் (ரூ.18 கோடியே 40 இலட்சம்) செலவாகியுள்ளது. இவ்வாறு டோன்லே கூறினார். (4)

# லிபிய கிளர்ச்சியாளர்கள் மீது நேட்டோ மீண்டும் தாக்குதல்

லிபியாவில் கிளர்ச்சியாளர்கள் மீது நேட்டோ படைகள் தவறுதலாக குண்டு வீசியதில் 4 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர்.


லிபியாவில் ஜனாதிபதி கடாபியை எதிர்க்கும் கிளர்ச்சியாளர்கள் மீது அந்த நாட்டு இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக லிபிய இராணுவத்தை ஒடுக்கும் வகையில் அங்கு நேட்டோ படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நேட்டோ படைகள் லிபிய இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில் எண்ணெய் நகரான பிரெகாவில் தவறுதலாக கிளர்ச்சியாளர்கள் மீது நேட்டோ படைகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின இதில் 4 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர். இந்த தாக்குதலால் கிளர்ச்சியாளர்கள் நேட்டோ படைகள் மீது கடும் கோபம் அடைந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் மீது நேட்டோ படைகள் தாக்குதல் நடத்துவது கடந்த ஒரு வாரத்தில் இது இரண்டாவது முறையாகும். இந்தத் தாக்குதல் தவறுதலாக நடந்துவிட்டது என்றும் இதற்காக வருத்தம் தெரிவிப்பதாகவும் நேட்டோ படைகளின் தலைவர் ஆண்டார்ஸ் போக் ரஸ்மஸ்ஸன் தெரிவித்தார்.

இதனிடையே கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள மிஸ்ராடா நகரை நோக்கி கடாபியின் லிபிய இராணுவம் வேகமாக முன்னேறி வருவதாக பி.பி.சி அறிவித்தது. (4)



ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டோர் காஸூ மாகாணத்தில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களை நேரில் சந்தித்து அந்நாட்டு மன்னர் அகிஹிட்டோ மற்றும் அவரது மனைவி மிட்சிகோ ஆறுதல் தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

# ஓம் சக்தி



திரை விமர்சனம்



என்.டி.ஆரின் பேரனும், பிரபல தெலுங்கு நடிகருமான ஜூனியர் என்.டி.ஆர்.- இலியானா ஜோடி நடித்து தெலுங்கில் சக்கைபோடு போட்ட சக்தி படத்தின் தமிழ் டப்பிங்தான் ஓம்சக்தி

இந்தியாவை அழித்து ஏனைய உலக நாடுகளை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வரத் துடிக்கும் எகிப்து கொள்ளை கும்பல் ஒன்று, அதற்காக இந்தியாவில் உள்ள ராஜ குடும்பம் ஒன்றில் கையில் இருக்கும் சர்வசக்தி பொருந்திய வைரத்தை கொள்ளையடிக்க பல தலைமுறையாக திட்டமிடுகிறது. முதல் தலைமுறையில் சில இரகசியங்களையும், விடயங்களையும் அவர்களிடம் கோட்டை விடும் ஜூனியர் என்.டி.ஆர். அடுத்த தலைமுறையில் அவர்களை புரட்டி எடுத்து அந்த வைரத்தின் மூலம் இந்தியாவையும் மற்ற உலக நாடுகளையும் காக்கும் நம்பமுடியாத கதைதான் ஓம் சக்தி படத்தின் மொத்த கதையும்! அதை நம்பும் படியாக வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும் சொல்லியிருப்பது தான் படத்தின் பெரிய பலம்! ஜூனியர் என்.டி.ஆரின் அக்ஷன் அதிரடி தமிழ் சினிமாவுக்கு புதுசு! இலியானாவின் காஸ்டியூமும், கவர்ச்சியும் ப்ளஸ்! பிரபு, எஸ்.பி.பி, நாசர், ஜாக்கிரைப், சோனுசூது உள்ளிட்டவர்கள் படத்தின் பளீச் பாத்திர பலம்! புராதன கோயில்கள், குளிர் காஷ்மீர் சுளீர் பாலைவனங்கள் மற்றும் டுபாய், எகிப்து உள்ளிட்ட வெளிநாட்டு இடங்கள் கும்பமேளா காட்சிகள் உள்ளிட்ட பலவும் ஓம் சக்தியின் வெற்றி சக்திகள்! மணிஷர்மாவின் இசை, மருதபரணியின் வசனம், மெஹர் ரமேஷின் இயக்கம் எல்லாமும் சேர்ந்து ஓம் சக்தியை ஒருமுறை அல்ல பலமுறை பார்க்க தூண்டும் சக்திகள்!

மொத்தத்தில் ஓம்சக்தி தமிழ் சினிமாவுக்கு புதிய உத்தி!





விஜய்



# தெய்வத் திருமகன் விக்ரமுக்கு தேசிய விருது கிடைக்கும்




இயக்குநர் விஜய் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் படத்துக்கு தெய்வத் திருமகன் என்று பெயர் வைக்கப் பட்டுள்ளது. மே மாதம் வெளியாகும் இந்தப் படத்தின் அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் இயக்குநர் விஜய் பேசியதாவது,

இந்த படத்தின் கதையை விக்ரமிடம் இரண்டு வருடங்களுக்கு முன்பே சொன்னேன். நடிக்க சம்மதித்தார். அவர் மறுத்திருந்தால் இந்தப் படத்தை இயக்கி இருக்க மாட்டேன். அவரைத் தவிர வேறு யாரும் நடிக்க முடியாத கரக்டர் அது. விக்ரமுக்கு தேசிய விருது உள்ளிட்ட பல விருதுகளை அள்ளித் தரும் கரக்டர். மனவளர்ச்சி குன்றியவராக நடிக்கிறார். இதற்காக அவர் எடுத்துக் கொண்ட பயிற்சி அதிகம். ஒவ்வொரு காட்சியும் பலமுறை ஒத்திகை செய்து பார்த்த பின்னரே நடித்தார். நீரவ் ஷாவன் ஒளிப்பதிவும், ஜி.வி. பிரகாஷின் இசையும் படத்துக்கு பெரிய பலம் . வரும் 14ஆம் திகதி பாடலை வெளியிடுகிறோம். இவ்வாறு விஜய் கூறினார்.

விக்ரம் கூறும்போது, எனக்கு திருப்பு முனையைத் தரப்போகும் படம். உணர்வுப் பூர்வமாக நடித்த படம். நாசரும் நானும் போட்டிப் போட்டு நடித்திருக்கிறோம். நல்ல நடிகர்களோடு நடிக்கும்போது எனக்கு நடிப்பு நன்றாக வருகிறது. நிறைய கற்றுக்கொள்ளவும் முடிகிறது. அனுஷ்கா நடிப்பில் அசத்தியிருக்கிறார். அமலா பால் வேறு கோணத்தில் நடித்திருக்கிறார். நல்ல இயக்குநர்கள் அமைவது என் பாக்கியம். இந்தப் படத்தில் விஜய் அமைந்திருக்கிறார் என்றார்.



# கார்த்தி நடிக்கும் சகுனி

சிறுத்தை படத்தின் வெற்றிக்கு பின்னர் கார்த்தி நடிக்கும் படம் சகுனி. இப்படத்தின் கதையை சங்கர் தயாள் என்னிடம் சொல்லும் போது, எனக்கு கதை பிடித்துப் போனது என்றும் கதையில் பல சுவாரஸ்யமான விடயங்கள் இருப்பதாக வும் கார்த்தி தெரிவித்தார். படத்தின் ஹீரோயின் இன்னும் முடிவாகவில்லை. படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குபவர் சங்கர் தயாள். இவர் இயக்குநர் எழிலி டம் உதவியாளராக இருந்தவர். படத்தின் இசை ஜி.வி.பிரகாஷ் குமார். பி.ஜி. முத்தையா ஒளிப்பதிவு செய்கிறார். கலை ரஜீவன், படத்தொகுப்பு ஆண்டனி. படத்தை டீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கிறது.

# தமிழ்ப்படம் தயாரிக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்

ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான் தனது தயாரிப்பு நிறுவனம் மூலம் தமிழ் படங்களை தயாரிக்கவிருக்கிறார். தமிழ், தெலுங்கு இந்தி படங்களுக்கு இசையமைத்து பிரபல இசையமைப்பாளர் என்ற அந்தஸ்தையும் தாண்டி ஒஸ்கார் நாயகனாக வலம்வந்து கொண்டிருக்கும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், சமீபத்தில் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார்.

வை எம். மூவிஸ் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த புதிய நிறுவனத்தின் மூலம் சினிமாப் படங்களை தயாரிக்க திட்டமிட்டிருக்கும் ரஹ்மான், முதலாவதாக தமிழ் படங்களை தயாரிக்கப் போகிறாராம். இதற்காக புது இயக்குநர்களிடம் கதை கேட்கும் பணியை ஆரம்பித்திருக்கும் அவர். புதுமுகங்களை வைத்தே குறைந்த செலவில் படங்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளாராம். (தமிழ் சினிமாவில் கடந்த சில ஆண்டுகளாக குறைந்த செலவில் படங்கள்தானே பிரமாண்ட வெற்றியை பெற்றுக்கொண்டிருக்கின்றன).

# விஜய் அரசியலுக்கு வரமாட்டார்! எஸ்.ஏ.சி. அடுத்த பல்டி!!

எனது மகன் விஜய் அரசியலுக்கு வரமாட்டார் என்று விஜய்யின் நந்தை டைரக்டர் எஸ்.ஏ.சந்திரசேகர் கூறியுள்ளார். விஜய் மக்கள் இயக்கத்தின் நிறுவுநரான எஸ்.ஏ.சி. கன்னியாகுமரி மாவட்டத்தில் அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார். அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்தான் இப்படி பல்டி அடித்திருக்கிறார்.

விஜய் நிச்சயம் அரசியலுக்கு வருவார்; இப்போதைக்கு விஜய் அரசியலுக்கு வரமாட்டார்; விஜய் அரசியலுக்கு வர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். விஜய்யால் அரசியலில் பெரும் மாற்றத்தை கொண்டு வரமுடியும்... என்றெல்லாம் அவ்வப்போது வடிவேலு காமெடி போலவே வருவார்... ஆனா வர மாட்டார்... என்று கூறி வரும் சந்திரசேகர் இப்போது அடித்திருக்கும் பல்டி, விஜய் அரசியலுக்கு வரமாட்டார் என்பதுதான்.

அவர் அளித்துள்ள பேட்டியில், விஜய் மக்கள் இயக்கம் அதிமுக அணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. எங்கள் இயக்க தொண்டர்கள் அசுர வேகத்தில் அ.தி.மு.க.அணிக்கு வேலை செய்கிறார்கள். ஆனால் தற்போதைக்கு விஜய் மக்கள் இயக்கம் அரசியல் இயக்கமாக மாறும் வாய்ப்பு இல்லை. அதேபோல விஜய் அரசியலுக்கு வரமாட்டார். விஜய் அரசியலுக்கு வருவதற்காக அ.தி.மு.க.வுக்கு ஆதரவு கொடுக்கவில்லை.

ஒரு மாற்றம் வரவேண்டும் என்பதற்காகத்தான் விஜய் மக்கள் இயக்கம் அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தத் தேர்தலில் விஜய் நேரடிப் பிரசாரம் செய்யவும் வாய்ப்பில்லை. ஆளுங்கட்சி மீது மக்களுக்கு வெறுப்பு அதிகமாக இருக்கிறது. நான் தி.மு.க. ஆதரவாளராக இருந்தேன். எனக்கே வெறுப்பு வந்துவிட்டது. கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் கொலை, கொள்ளை, ஊழல், விலைவாசி உயர்வு, மின் தடை ஆகியவை மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தியது. அதிமு.க கூட்டணிக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. அ.தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும். வாரிசுகள் அந்ததந்த தொழிலுக்கு வருவது தவறல்ல. ஆனால் அந்த தொழிலையே கபளீகரம் செய்வது தான் தவறு என்றார்.



'மாவீரன்'
ராம்சரண் தேஜா - காஜல் அகர்வால்

முட்டாளுக்கு 'அமைதியாக இரு' என்று சொல்வதைவிட உயர்ந்த அறிவுரை வேறு எதுவும் இல்லை. *- பெர்னார்ட் ஷா*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நாக்கூசாமல் பேசுகிறார் தமிழக முதல்வர் கருணாநிதி

ஈழத்தமிழர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் போராடும். இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழக சட்டசபைக்கான தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களுக்காக தி.மு.க. எப்போதும் நடித்துக்கொள்ளும் என கூற நினைத்த கலைஞர் வாய் தழுத்து எப்போதும் போராடும் என கூறிவிட்டார் போலும்.

தமிழகத்தில் முதல்வர் கருணாநிதி ஆட்சியில் இருந்த போதுதான் வன்னியில் பெரும்போர் நடந்ததென்பதை வரலாறு ஒருபோதும் மறந்துவிட மாட்டாது.

பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் துடிதுடித்துப் பலியாகிப் போனபோது முதல்வர் கருணாநிதி மௌனமாக இருந்தார் என்ற வேதனைச் செய்தி மறக்கக்கூடியதல்ல.

தமிழ்மக்கள் இலங்கையில் சிறுபான்மை இனமாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் எட்டுக் கோடி தமிழர்கள் உள்ளனர். அப்படியானால் தமிழர்கள் உலகில் சிறுபான்மை இனத்தவர்கள் அல்ல.

அதேநேரம் சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மையினராக இருக்கலாம், ஆனால் உலகில் அவர்கள்தான் சிறுபான்மையினர். அதிலும் தமிழகத்தில் இருக்கக்கூடிய எட்டுக் கோடி தமிழர்களில் மிகச் சிறிய பகுதியினரே இலங்கையிலுள்ள சிங்களவர்கள்.

அவ்வாறாயின் உலகிலுள்ள பெரும்பான்மையான தமிழினத்தை உலகின் சிறுபான்மையான சிங்கள இனம் அடிமைப்படுத்தி வைத்துள்ளது என நிறுவ முடியும்.

எனவே தமிழ், சிங்கள இனங்கள் என்பதனை உலகளாவிய ரீதியில் விரித்துப் பார்க்கும்போது பெரும்பான்மையினமாக இருக்கக்கூடிய தமிழினம் இலங்கையில் இன்னல்படுவதற்கு தமிழகமே காரணமெனலாம்.

ஈழத்தமிழர்களை காப்பாற்றுவது போல முதல்வர் கருணாநிதி நடித்துக்கொண்டமை எங்கள் அழிவை மேலும் பன்மைத்துவப்படுத்தியது.

அதோ தூதுக்குழு வருகிறது. இதோ நான் உண்ணாநோன்பு இருக்கிறேன். டி.ஆர்.பாலு, சோனியாவைச் சந்திக்கச் சென்றுவிட்டார். இலங்கை அரசு வன்னியில் யுத்தநிறுத்தம் செய்துள்ளது. எங்கள் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்றுள்ளது. இனி வன்னியிலுள்ள தமிழ் மக்களுக்கு ஆபத்தில்லை...

இவ்வாறெல்லாம் கூறி எங்களை நம்பவைத்து நாசம் செய்த முதல்வர் கருணாநிதி ஈழத்தமிழர்களுக்காகப் போராடுவோம் என நாக் கூசாமல் சொல்லுவதைப் பார்க்கும்போது,

ஆ! கடவுளே அறிஞர் அண்ணாவை இழந்து பெரியாரைப் பறிகொடுத்து மக்கள் திலகத்தை மண்ணுக்குள் புதைத்துவிட்டு மனமழுது கொண்டிருக்கும்போது, இந்நாள் மிஞ்சி பொய்யுரைக்கிறதே. எல்லாம் நாங்கள் செய்த வினை என்பதைத் தவிர வேறு எப்படி நினைப்பது?

## நெடுந்தீவில் ஒதுங்கிய சடலம் இந்திய மீனவருடையது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் இந்திய மீனவர்கள் குழுவினால் நேற்று இனங்காணப்பட்டுள்ளது.

இந்திய கடற்றொழிலாளர்கள் நான்கு பேர் பயணித்த படகு ஒன்று காணாமற் போனதாகக் கூறி வெள்ளைக் கொடியுடன் இலங்கை கடற்பரப்பில் இந்தியக் கடற்படையினர் அண்மையில் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதேவேளை நெடுந்தீவு கடற்பரப்பிலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்தவர் இந்திய மீனவரா என்ற சந்தேகம் ஏற்பட்டதையடுத்து மேற்படி சடலத்தைப் பார்வையிடுவதற்காக இந்தியாவிலிருந்து 6 பேர் கொண்ட குழு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்தது.

இந்தக் குழுவில் இந்திய கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் உறவினர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

மீட்கப்பட்டவரின் சடலம் இந்தியாவின் விருதுநகர் மாவட்டத்திலுள்ள வீரசுளம், கொட்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த சேவியர் விக்ரஸ் (வயது 42) என உறவினர்களால் இனங்காணப்பட்டது.

இதேவேளை காணாமற் போன பிரான்சிஸ் அந்தோனி (வயது 34), முத்துராமலிங்கம் மாரிமுத்து (வயது 30), என். ஜன்பால் (வயது 28) ஆகிய மூவர் தொடர்பாக எதுவித தகவல்களும் தமக்குத் தெரிய வரவில்லை என இக்குழுவினர் தெரிவித்தனர்.

இக்குழுவினரை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலையில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்திய உயரதிகாரிகளும் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டதோடு உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட பின் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதவான் எஸ்.ஏ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

இதையடுத்து இந்திய மீனவரின் சடலம் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மிகவும் பாதிப்படைந்துள்ளதால் அதனை இன்று புங்குடுதீவில் புதைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-6)

## ஊடகங்களுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் வழங்க முடியாது

### கெஹலிய தெரிவிப்பு

இலங்கையில் எந்தவொரு ஊடகத்துக்கும் அளவுக்கதிகமான சுதந்திரத்தை வழங்க முடியாது என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் பல ஊடகங்கள் நடுநிலை தவறிச் செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ள அமைச்சர் அதன் காரணமாக அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வின்போது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை கலைத்து விடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாடுகளில் தஞ்சம் கோரியிருந்த இலங்கை அகதிகள் திரும்பியுள்ளனர்

### ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி யிருந்த அறுநூறு இலங்கை அதிகள் மீண்டும் நாடு திரும்பியதாக ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

அதில் பெரும்பாலானவர்கள் இந்தியாவில் இருந்து மீண்டும் நாடு திரும்பியதாகவும்பிரான்ஸ், கனடா, ஜேர்மன், ஐக்கிய இராட்சியம், சுவிற்ஸர்லாந்து, மலேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும் கணிசமானவர்கள் அவ்வாறு நாடு திரும்பியிருப்பதாகவும் ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்துக்கான இலங்கைப் பிரதிநிதி மைக்கல் ஸ்வெக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கையில் யுத்தம் முடிவுற்ற நிலையில் இலங்கை அகதிகள் நாடு திரும்புவதில் கடும் ஆர்வம்காட்டி வருவதாகவும்,கடந்த வருடம் மட்டும் 3 ஆயிரத்து 200 பேரளவில் நாடு திரும்பியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு நாடு திரும்பியவர்களுக்கு உதவுவதற்கென வடக்கு மாகாணத்தில் மட்டும் தற்போதைக்கு ஐந்து இணைப்புக் காரியாலயங்களை நிறுவியுள்ளதாகவும் ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தாகராலயம் அறிவித்துள்ளது. (2- 4)

## "கல்லறைகளும் சவால்களும்" (யோவான் 11:1-45)

"The absence from whom we love is worse than death" நாம் அன்பு செய்பவர்கள் எம்மை விட்டுப் பிரிவது மரணத்தை விட வேதனையானது. அந்த அன்பு செய்தவரே மரணித்து விட்டால் அந்தப்பிரிவின் வேதனையை எதற்கு ஒப்பிட முடியும்.


இயேசுவின் அன்பு நண்பர் இலாசர் மரணித்துவிட அழுகுரல்கள் மனிதனின் அழுகுரல்கள் கடவுளைத்தினமும். வந்து சேர்வது வளமை. "மக்கள் அழுது.... 'ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை?'... "(மாற் 5: 39) "...அவர் மீது பரிவு கொண்டு, 'அழாதீர்' "(லூக் 7:13). இங்கு அழவேண்டாம் என்று இயேசு கூறினாலும் இன்று நற்செய்தியில் அழுகின்ற இயேசுவை மனிதன் சந்திக்கின்றான்.

மண்ணுக்கு வந்த மனு மகன் தன் நண்பர் இலாசரின் மரணத்தில் கண்ணீர் சிந்து கிறார். மார்த்தா மரணத்தைக் கண்டு பயந்து இயேசுவை நோக்கி,நாற்றமடிக்கும் உடலை நன்கு உயிர்ப்பிக்க வல்லவர் நல்லாயர் என்பதை அறியாதவள் போல் "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என்சகோதரன் இறந்திருக்கமாட்டான்" என்கிறாள்.இன்று மரணப் பயம் எவருக்கு?

சாவைச்சந்திப்பவனுக்கா? அருகில் இருப்பவனுக்கா? என்றால் விடை தேட வேண்டிய வினாவாக எம்முன் இருக்கின்றது. சாவைச்சந்திப்பவன் கூட பல வேளைகளில் பயன்படுவதில்லை. ஆம் இங்கு அவர்கள் மறைசாட்சிகள்,கொள்கைவீரர்கள் இன்று பலர் கொள்கைக்காகச் சாவைத்தேடி செல்கின்றனர்.கூட இருந்தவனுக்கு இன்று பயம் மிச்சமாக இவனை நம்பி இருந்தேனே, எல்லாம் முடிந்து விட்டதே. இப்படித்திடீரென போய் விட்டானே என்று புலம்புவோர் என்னும் பலர். இந்த அழிவுகளால் எல்லாம் முடிந்து விட்டன.நான்கு நாட்களாகி விட்டன. நாற்றமடிக்குமே என்று நாம் நொந்துவிடத் தேவையில்லை. நம்பிக்கையுடையவன் இதை புது வாழ்வுக்குச் சாதகமாக்கிக் கொள்கிறான். கொள்கையில்லாதவன், பாவத்தில் வாழ்பவன் அருள் நிலை இழந்தவன் இந்தச்சாவைக் கண்டு பயந்து தினமும் செத்துக் கொண்டிருக்கிறான். இவர்களுக்கு உண்மையைச் சொல்லபயம், நியாயத்தைப்பேசப்பயம். தங்களுக்கு தாங்களே கவசத்திற்காக் கல்லறையைத் தேர்ந்து கொண்டவர்கள்.

திருச்சபை இன்று தருகின்ற வாசகங்களை உற்றுப்பார்க்கையில் "கல்லறைகளும் சவால்களும்" என்றும் நாம் சிந்திக்கலாம். **கல்லறை**-இறந்த உடலை அடக்கம் செய்வதற்காக கற்களால் உருவாக்கப்பட் ஒரு சிற்றறை. **சவால்**-வெற்றி பெறுவதற்கான ஓர் அழைப்பு. விடைத்தீர்வுக்கு முன்னுள்ள ஒரு வினாச் சிக்கல்.இன்று கல்லறைகளை மூன்று வகையாகப்பார்க்கலாம்: உடல், மனம், சமூகம் அடக்கக்கல்லறைகள் அவை.உடல் இறப்பு என்பன- உயிர் இழப்பு என்பன உடல் அடக் கல்லறைகளும்,மனம் இறப்பு -அன்புஇழப்பு, ஆண்டவரையும்அயலவரையும், பகைவரை அன்புசெய்யாமை போன்ற அன்பற்ற மனங்கள் மனம் அடக்கக்கல்லறைக்குள்ளும், சமூக இறப்பு-சமத்துவம் இழப்பு ஏற்றத்தாழ்வுகள் வர்க்க வேறுபாடுகள் சமனற்ற சமூக செயல்கள் சமூக அடக்க கல்லறைக்குளும் அடக்கலாம்.

இலாசர் மாத்தா மரியாவுடன் சகோதர பாசம் முடியவில்லை வளர்ந்துவரும் உலகில் இன்றும் வருங்கால சந்ததி எதிர்பார்க்கும் ஏக்க உணர்வு உடனிருப்பு பாசமே. இயேசு நம்மோடு உடனிருக்கிறார். நாம் அவரோடு இருக்கின்றோமா? உயிர்ப்பிக்கப்பட்ட இலாசரின் வாழ்வு, உணர்த்தும் பாடம் இயேசுவின் உடனிருப்பே. உட னிருந்தாலே உயிர்ப்பின் உண்மை. கல்லறை



### பரமபிதா காட்டிய பாதை

களையும் சலால்களையும் வெற்றி கொள்வோம். இறப்பு புதுவாழ்வின் ஒருபடி. புதிய ஒன்றை உருவாக்கும் பாதை என்பதை உணர்வோம். இறப்பையும் இழப்பையும் தாண்டி புது வாழ்வைப் பெறுவதுதான் இயேசு கற்றுத் தந்த வாழ்க்கைத்தத்துவம் இதை நம்பி, இனி இனிது வாழ்வோம்.

ம. றொன்சின்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.





## துப்பாக்கி சத்தம் கேட்காத இடம்!

நிலாவில் துப்பாக்கியால் சுட்டால் காதில் வெடியொலி கேட்காது. ஏனென்றால் நிலாவில் வளி மண்டலம் கிடையாது. ஒலி அலைகளைத் தாங்கிச் செல்ல ஊடகம் தேவை. அதேபோல விண்வெளியும் வெற்றிடம்தான். எனவே விண்வெளி வீரர்களால் நம்மைப் போல் அங்கு உரையாட முடியாது.

ஊடகத்தின் அடர்த்தியும் வெப்பமும் ஒலி அலைகளின் வேகத்தை நிர்ணயம் செய்யும். ஒலி, காற்றில் செல்லும் வேகத்தைவிட திரவங்களில் செல்லும் வேகம் அதிகம். அதையும்விட அதிக வேகத்தில் திடப்பொருளில் செல்லும். மின்குமிழின்உட்பகுதியில்காற்று இல்லை. வெற்றிடமாக உள்ளது. மின்குமிழ் உடையும் போது அப்பகுதியின் வழியாக வெற்றிடத்தை நிரப்ப எல்லாப் பகுதிகளில் இருந்தும் காற்று வேகமாகச் செல்கிறது. அவ்வாறு வேகமாகச் செல்லும் காற்றின் ஒலியே நமக்குச் சத்தமாகக் கேட்கிறது.

# பூமியின் மீது பனியின் ஆதிக்கம்!

பூமியின் நீண்ட வரலாற்றில் அதன் பல பகுதிகள் பலமுறை பனி உறையால் போர்த்தப்பட்டு இருந்திருக்கின்றன. பூமத்திய ரேகையை நோக்கித் துருவப் பகுதிகளிலிருந்து பனி பரவிச் சென்று அப்பகுதியின் வெப்பநிலையை மாற்றிப் பல பரப்புகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த காலகட்டமே 'பனியுகம்'. 50 கோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு பனியுகம் இருந்ததாகக் கருதப் படுகிறது. பின்னர் 25 கோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு பனியுகம் இருந்திருக்கிறது. நீண்ட காலம் பூமியின் பல பகுதிகளை பனி போர்த்தியிருந்தாலும், நாளடைவில் சுருங்கி துருவப்பகுதிகளுக்குச் சென்றுவிட்டது.

பல பனியுகங்கள் தோன்றி மறைந்திருந்தாலும், சமீபத்தில் தோன்றி மறைந்த யுகம் குறிப்பிடத்தக்கது. சுமார் 6 இலட்சத்தில் இருந்து ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது அது.

அச்சமயத்தில் ஐரோப்பாவின் பெரும்பகுதியும், ரஷ்யா, அமெரிக்காவும் பனிப்பாளங்களால் மூடப்பட்டன. பின்னர் அவை சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தன. ஏறக்குறைய 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் அப்பகுதிகள் பனிப்பாளங்களின் பிடியிலிருந்து முற்றிலுமாக விடுபட்டன.

பனிப்பாளங்கள் தரைப்பரப்பை மூட ஆரம்பித்தபோது, அப்பகுதிகளில் வெப்பநிலை வெகுவாகக் குறைந்தது. இன்று பாலைவனப் பகுதிகளாக உள்ளவை, வளம் கொழிக்கும் நிலப்பகுதிகளாக மாறின. பரவி வந்த பனிப்பாளங்கள் இடையே ஏராளமான நீர் சிக்கியதால் கடலின் நீர்மட்டம் 100 மீற்றருக்குக் கீழே குறைந்துவிட்டதாம்.

மீண்டும் பனியுகம் தோன்றுமா என்ற கேள்விக்கு விஞ்ஞானிகளால் பதில் கூறமுடியவில்லை. பனியுகம் எப்படித் தோன்றுகிறது என்ற காரணத்தைத் தெரிந்துகொண்டால்தான் இக்கேள்விக்குப் பதில் கிடைக்கும்.

பனியுகத்தின் தொடக்கத்தில், கடலில் நீர்மட்டம் இன்றைய நீர்மட்டத்தை விட 100 மீற்றர் வரை தாழ்வாக இருந்தது. பனிப்பாளங்கள் உருக ஆரம்பித்ததும் சில இடங்களில் கடலில் நீர்மட்டம் முன்பிருந்ததை விட அதிகமாக உயர்ந்தது. பல நிலப்பரப்புக்கள் கடலில் மூழ்கின. இன்றும் துருவப்பகுதி பனிஉருக ஆரம்பித்தால் கடலின் நீர்மட்டம் பல மீற்றர்கள் உயர்ந்துவிடும். கடற்கரையோர பள்ளத்தாக்குகளும் கடலில் மூழ்கிவிடும். எனினும் அம்மாதிரியான நிலைஏற்பட ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும்.






## டி வில்லியர்ஸ் அதிரடியில்
# கொச்சி தஸ்கர்ஸ் அணியை வீழ்த்தியது பெங்களூர் அணி

(கொச்சி)

டி வில்லியர்ஸின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 6விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இத்தொடரில் அறிமுகமான கொச்சி தஸ்கர்ஸ் அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியளித்தது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 4ஆவது இருபது–20 கிரிக்கெட் தொடரில் நேற்று கொச்சியில் நடைபெற்ற 3ஆவது ஆட்டத்தில் மஹேல ஜெயவர்த்தனா தலைமையிலான கொச்சி தஸ்கர்ஸ் அணியும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொச்சி தஸ்கர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரண்டன் மக்குலம் 32பந்துகளில் (4பவுண்டரிகள், 2சிக்ஸ்சர்கள் உட்பட) 45ஓட்டங்களையும், வி.வி.எஸ்.லக்ஸ்மன் 29பந்துகளில் (2பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 36 ஓட்டங்களையும், ஹோட்ஜ் 27, ஜடெஜா 23ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், நான்ஸ், விக்டோரி, டில்சான்,ஹோலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி டிவில்லியர்ஸின் அதிரடியில் 18.4ஓவர்களில் 4விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 6விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் டிவில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 40 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 5சிக்ஸ்சர்கள் உட்பட) 54ஓட்டங்களையும், அகர்வால் 33, சௌரவ் திவாரி 26ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கொச்சி தஸ்கர்ஸ் அணி சார்பாக சிறிசாந்த், ஜடெஜா, வினேய்குமார், ஹோம்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 2புள்ளிகளைப் பெற்றது.

# போத்தா போட்டுத் தாக்கினார்
# ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றி



(ஹைதராபாத்)

போத்தாவின் அதிரடி கைகொடுக்க, ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, 8விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வெற்றிகொண்டது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10அணிகள் மோதும் இருபது–20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் குமார் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20ஓவர்களில் 8விக்கெட்டுக்களையிழந்து 137ஓட்டங்களை எடுத்தது.

இதில் தேயா 20பந்துகளில் (2பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 28ஓட்டங்களையும், கிறிஸ்ரியன் 19பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2சிக்ஸர்கள் உட்பட) 26ஓட்டங்களையும், ஜக்கி 25, டவான் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.அணித்தலைவர் சங்கக்கார பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக சுமித்சிங், திரிவெடி ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும், அணித்தலைவர் ஷேன் வோர்ன் 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20ஓவர்களில் 138ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி போத்தாவின் அதிரடியில் 18.5ஓவர்களில் 2விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 141 ஓட்டங்களை குவித்து 8விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இதில் ஜெகான் போத்தா ஆட்டமிழக்காமல் 47பந்துகளில் (8பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 67ஓட்டங்களையும், டிராவிட் 28, ரெய்லர் ஆட்டமிழக்காமல் 21ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பாக ஸ்ரையன் 2விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வெற்றிக்கு பந்துவீச்சில் அசத்திய திரிவெடி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றொயல்ஸ் அணி 2புள்ளிகளைப் பெற்றது.

# சதமடித்து சாதித்தார் கிளார்க்;
# பங்களாதேஷை வீழ்த்தியது ஆஸி,



(மிர்பூர்)

மைக்கெல் கிளார்க்கின் பொறுப்பான சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் நேற்று மிர்பூரில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல்ஹசன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மைக்கெல் கிளார்க்கின் சிறப்பான சதத்தின் மூலம் 50ஓவர்கள் நிறைவில் 7விக்கெட்டுக்களை யிழந்து 270 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 111 பந்துகளில் (6பவுண்டரிகள், 2சிக்ஸ்சர்கள் உட்பட) 101 ஓட்டங்களையும், வோட்ஷன் 37, பொன்டிங் 34, மைக்கெல் ஹசி 33 ஓட்டங்களையும், ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 26ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷீவோ 3விக்கெட்டுக்களையும், மோர்டாஷா 2விக்கெட்டுக்களையும், அப்துர் ரஷாக் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50ஓவர்களில் 271ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இம்ருல் ஹைஸ் 4 ஓட்டங்களுடனும், நபீஸ் பூச்சியத்துடனும், ஹசன் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சொதப்ப பங்களாதேஷ் அணி 12.5 ஓவர்களில் 49ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து ஆரம்ப வீரர் இக்பாலுடன் இணைந்த சகிப் அல்ஹசன் சிறப்பாக ஆடிய போதும் பங்களாதேஷ் அணி50ஓவர்கள் நிறைவில் 5விக்கெட்டுக்களையிழந்து 210 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 60ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் தமீம் இக்பால் 89பந்துகளில் (4 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 62ஓட்டங்களையும், அணித்தலைவர் சகிப் அல்ஹசன் 90பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 51ஓட்டங்களையும், ரகீம் ஆட்டமிழக்காமல் 44, மகமுடுல்லா ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரெட்லி, ஜோன்சன், ஹேஸ்ரிங்ஸ், டோகோரி, சிமித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 3போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழிசமைத்த மைக்கெல் கிளார்க் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை மைக்கல் கிளார்க் அவுஸ்திரேலிய அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்று முதல் போட்டியில் வெற்றியைப் பதிவு செய்தார்.

## இன்றைய ஆட்டங்கள்

DLF IPL

| போட்டி 4 | போட்டி 5 |
|---|---|
| டில்லி டேர்டேவில்ஸ் | புனே வாரியர்ஸ் |
| எதிர் | எதிர் |
| மும்பை இந்தியன்ஸ் | கிங்ஸ் லெவின் பஞ்சாப் |
| மைதானம் : டில்லி | மைதானம்: மும்பை |
| நேரம்: மாலை 4.00மணி | நேரம் : இரவு 8.00மணி |

STUDYING UK

**April 2011 Intake**

ENGLAND

ஏப்ரல் மாதத்தில் ஏற்பட இருக்கும் மாற்றத்திற்கு முன் மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

**O/L அல்லாதவர்களுக்கும் LONDON செல்லும் ஓர் அரிய வாய்ப்பு**

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.
IELTS தேவையில்லை, விசேட ஆங்கில பயிற்சி வழங்கப்படும்.
Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
20 மணி நேர பகுதி நேர வேலைவாய்ப்பு உறுதி.

**கடைசியாக சென்றவர்களில் சிலர்:**




உறுதியான பயணம் உயர்வான கல்வி நிறைவான சேவை

**WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES**
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
No. 23, Thamaraikeni Road, Batticaloa.
Telephone: 0213207778 - 0653064810 - 0113056888.
**Hot line : 0771919192 - 0772229286**



# சேவை முகவர்

## வீடு காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் களஞ்சியசாலைக்குரிய கட்டிடம், நுணாவில் A9 றோட்டிலிருந்து 1000 m தூரத்தில் 2 பரப்பு தென்னம் காணி, இந்து மகளிர் வீதி, சுந்தர்மடம், பழம்வீதி, மணல்தறை லேன், ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில், வைமன் றோட், உரும்பிராய் 9 பரப்பு, இருபாலை 45 பரப்பு ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு. யாழ்நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: சுந்தரம் 0212229177,0774819801 (4449)



புதிய பிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903


## கூட்ட...

போது கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலமுக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்,

(ந-5)


## காணி விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கும் குளப்பிட்டிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: ராஜா
0750937296 (4432)



## கார் விற்பனைக்கு

POWER STEERING.
POWER SHUTTER
A/C PERFECTLY WORKING,
POWER MIRROR.

அனைத்து ஒரிஜினல் வளங்களுடனும் 15-XXXX தொடரிலக்கமுடைய மெற்றாலிக் சில்வர் கலர் கார் மலிவு விலையில் விற்ப னைக்கு உண்டு.
தொடர்பு: 0774528818
SM's COMPLEX
824,ஆஸ்பத்திரி வீதி,
(4404) யாழ்ப்பாணம்.



## சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதி பிள்ளையார் கோவில்

### பொது மண்டப திறப்பு விழா

தலைமை : திரு. மு.பத்மநாதன்
காலம் : 10.04.2011
இன்று ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி தொடக்கம்
10.30 மணிவரையான சுப வேளையில்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
ஆலய பரிபாலன சபை
பெரியவளவு ஸ்ரீ மகா கணபதி பிள்ளையார் கோயில்,
சித்தன்கேணி.
(C-2939)



# STUDY&WORK IN UK

யாழ். மாணவர்களின் நம்பிக்கையை வென்ற நாம் உங்களின் O/L தகைமையுடன் தொழில் வாய்ப்புடன் கூடிய கல்வியை U.K இல் கற்பதற்குரிய ஒழுங்குகளை விரைவாகச் செய்து தருகின்றோம்.

IELTS தேவையில்லை

- மொத்தச் செலவு 8 லட்சம் மட்டுமே. (College fee, Sponsor, Airticket, P.fee)
- குடும்பமாகச் செல்வதற்குரிய ஏற்பாடும் செய்து தரப்படும்.
- 4-5 வாரத்தினுள் U.K செல்லலாம்.
- 100% பகுதி நேர வேலை வாய்ப்பிற்கான ஏற்பாடுகள்.





கிளிநொச்சி, வன்னி வாழ் மாணவர்களுக்கு விசேட சலுகைகள், மிகக்குறைந்த கட்டணங்கள்.

"முயற்சி திருவினையாக்கும்"

(4450)

தொடர்புகளுக்கு: Sana 0776277767, 0750403340



தேசிய வியாபார முகாமை நிறுவனம் NIBM BUILDING COMPETENCIES

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற அரச நிறுவனமான NIBMன்

சிங்கள , ஆங்கில கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பம்

கணனி , முகாமைத்துவ பட்டப்படிப்புகளுக்கான பதிவுகளுக்கு 077 0716974 / 021 222 0361

Photo Editing & Advertising
Ceritification in Business Management

**Call 077 0716974 / 021 222 0362**

புத்தாண்டை முன்னிட்டு நமது மாணவர்கள் நடாத்தும் மாணவர் மற்றும் அலுவலகர்களுக்கான சதுரங்க (chess) சுற்று போட்டி

காலம்: 13-04-2011 வயதெல்லை: 16 வயதுக்கு மேல்

இலவச பதிவுகளுக்கு : 077 0716974 , 021 222 0362

No-40 College Road, Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது